# சமாதானம், மோதுகை ஆகியனவற்றின் தாக்க மதிப்பீட்டு முறையியல்

## (Peace and Conflict Impact Assessment Methodology-PCIA)

மார்க் ஹொப்மன்




1. அறிமுகம் 210
2. மரபுநிலைப்பட்ட கொடைவழங்குனர்களை மதிப்பீடு செய்தல் 213
3. அபிவிருத்திச் செய்திட்டங்கள், மோதுகை மற்றும் **PCIA** 217
4. **PCIA** கட்டடுக்கோப்புக்களை ஒன்றுடனொன்று இணைத்தல் 225
5. **PICA:** ஒரு சமாதான செயற்பாட்டாளரின் புலப்பார்வை 228
6. **PCIA :** எழுவினாக்கள், பிரச்சினைகள், இக்கட்டு நிலைகள் மற்றும் மேற்செல்லும் பாதைகள் 233
7. உசாத்துணை மற்றும் மேலதிக வாசிப்புகள் 235

# சமாதானம், மோதுகை ஆகியனவற்றின் தாக்க மதிப்பீட்டு முறையியல் (Peace and Conflict Impact Assessment Methodology-PCIA)

மாா்க் ஹொப்மன்

## 1. அறிமுகம்

பனிப்போா் முடிவுக்குவந்த காலத்திலிருந்து சா்வதேச சமூகமானது தொடா்ந்து நடைபெறும் பற்பல மோதுகை நிலைமைகளை எதிா்கொண்டுவந்துள்ளது. இந்நிலைமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: பனிப்போா் தொடா்பான சா்வதேசமுறைமையின் மாற்றத்திற்கு முன்னைய காலத்திலிருந்தே நிலவிய நீடித்த மோதுகைகள் (இலங்கை, காஷ்மீா், வட அயா்வாந்து, சைப்பிரஸ், மத்திய கிழக்கு), சோவியத் வீழ்ச்சிக்குப் பிந்திய மோதுகைகள் (நாகொா்ணோ, கரபாக், ஜோா்ஜியா/ அப்காசியா, மோல்டோவா/ ட்றான்ஸ்நியஸ்த்ரியா), இனச்சுத்திகரிப்பு அல்லது இனப்படுகொலை போன்ற திகிலூட்டும் நிகச்சிகளை ஏற்படுத்திய வன்முறைமோதுகைகள் (முறையே பால்கன் தீவுகள் மற்றும் ருவாண்டா), சிக்கலான நெருக்கடி நிலைகள் (சூடான், ருவாண்டா). இறுதியாக, தீட்சண்ணிய அரசியல் நோக்கானது வன்முறை அரசியல் பொருளாதார நடவடிக்கைகளால் கால்கொளஎல். (லைபீரியா, சியெரா, லியோன், அங்கோலா). இதுதவிர மோதுகைகளை உருவாக்கும் இயல்பு கொண்ட அல்லது எப்போதும் பீறி வெடிக்கக்கூடிய வன்முறை மோதுகை நீறுபூத்த நெருப்பாக காணப்படுகின்ற நிலைமைகளும் உள்ளன.



இந்த மோதுகை நிலைமைகளும், பதிற்குறி புரிவதாக நோக்கப்படவிருக்கும் தேவையும் சா்வதேச நிகழ்ச்சி நிரலில் ஒரு மைய இடத்தைத் தற்போது பிடித்துள்ளன (காா்ணிஜி 1997). இவை குறுகிய கால மனிதநேய உதவிகள் முதல் நீண்டகால அடிப்படையிலானதும், மேலும் பாரம்பரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டதும், நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் சிவில் சமூகத்தின் பல்வேறு செயல்திறமைகளை மேம்படுத்தல் என்பவற்றைக் குறியாகக் கொண்டதுமான செய்திட்டங்கள் வரை பரந்துசெல்வதாகக் காணப்படும். கடந்த ஐந்து வருடங்களில் இவ்வாறான முன்னெடுப்புகளுக்கு ஆதரவாக, அரசசாா்பற்ற அமைப்பு (NGO) களுடாக குறிப்பிடத்தக்கவகையில் அதிகரித்த அளவிலான இருதரப்பு மற்றும் பல்தரப்பு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிதியின் பெருந்தொகை மனிதநேய NGOகளின் கருத்திட்டங்களுக்கே செல்கின்றன. ஆனால், விசேடத்துவமான மோதுகைத் தீா்வு மற்றும் சமாதான உருவாக்கல் என்பவற்றைத் தம் தலையாய கட்டளையாகக் கொண்டியங்கும் அசாநிகளின் செய்திட்டங்களுக்குச் செலுத்தப்படும் நிதிகளிலும் அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது.

மோதுகை இயக்கவியல், அபிவிருத்தி மற்றும் மனிதநேய ஏற்பாடுகள், மற்றும் நீடித்த சமாதானத்திற்கான சாத்தியப்பாடுகள் என்பவற்றுக்கிடையேயான சிக்கலான இடையூடாட்ட நிலைகளை அடிப்படையாகக் கொண்ட, சோ்த்து வைக்கப்பட்ட, ஒருங்கிணைந்த பதிற்குறிகளை விருத்திசெய்யவேண்டிய தேவை ஏற்றுக் கொள்ளப்பட்டதாலேயே இது இவ்வாறு நிகழ்ந்தது. குறுகிய, நுணுக்கமான ஆணைகளுக்கப்பால் சிந்தித்துச் செயற்படவேண்டிய தேவையை, அபிவிருத்தி மற்றும் மனிதநேயத்துக்கான பெரும்பாலான அ.சா.நிகள் ஏற்றுக் கொண்டுள்ளன. குறைந்தபட்சம் தீங்கெதுவும் செய்யாதே என்ற திசைமுகப்படுத்தலைக் கொண்ட நிலையையே பெரும்பாலானவை கடைப்பிடிக்கின்றன. (அன்டோ்சன் 1999).

(குறிப்பாக சுவீடன், கனடா, நோர்வே மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற) பல உதவி வழங்கும் நாடுகளும் (கெயார், ஒக்ஸ்பாம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற) அ.சா.நிகளும் குறைந்தபட்ச சிந்திப்பிற்கு அப்பால் ஏலவே நகர்ந்துசெல்ல ஆரம்பித்துவிட்டன. அதற்குப்பதிலாக அவைகள் முழுமை சார் அணுகுமுறையொன்றை விருத்தி செய்யத் தலைப்பட்டுள்ளன.

இம்முயற்சிகள் எல்லாம் மனிதநேய உதவிகள், வறுமையொழிப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றுக்கான, மிகவும் பாரம்பரியமாக வருகின்ற மக்களாணைகளுக்குள் வரும் பெரும்போக்கான சமாதான உருவாக்கத்தை நோக்கியே பெரிதும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அபிவிருத்தி, மனிதநேய உதவி, மோதுகைத் தீர்வு மற்றும் சமாதான உருவாக்கம் என்னும் பாரம்பரிய துறைகளுக்கிடையே ஒரு காலத்தே தெளிவுறக் காணப்பட்ட எல்லைக் கோடுகளை ஊடறுத்துக் கொண்டு எண்ணக் கருக்களும், கருத்துக்களும், செயல் நடைமுறைகளும் அதிகரித்த நிலையில் புலம்பெயர்ந்து செல்கின்றன.

இருந்த போதிலும், இப்பதிற்குறிகளின் உள்ளடக்கம் பிரச்சினைகளற்றதாக இருந்ததில்லை. அன்டர்சன்(1999), ஸ்மில்லி (1998) மற்றும் ஏனையோர் காண்பித்துள்ளவாறு இந்நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செய்திட்டங்களின் தன்மை மற்றும் அவை செயற்படுத்தப்படும் விதம் என்பவையெல்லாம் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சமாதானம் என்பவற்றுக்கான வாய்ப்புகளை எந்த அளவுக்கு அதிகரித்தனவோ, அந்த அளவுக்கு மோதுகை இயக்கவியலை இன்னும் அதிக கடினப்படுத்தியுமுள்ளன. எனவே நிதியளிக்கப்பட்ட செய்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பரப்பெல்லை மற்றும் அதுபோல் இதில் சம்பந்தப்பட்டுள்ள நிதியிடுகைகளின் மட்டங்கள் என்பவற்றைப் பார்க்கையில், இவ்வாறான செய்திட்டங்களின் தாக்கங்களை மதிப்பீடுசெய்வதில் அதிகரித்த தீவிரமான ஆர்வம் காணப்படுகின்றமை ஆச்சரியப்படத் தக்கதொன்றல்ல. கற்றறிந்த பாடங்களை இனங்காண்பதிலும் மிகச் சிறந்த நடைமுறைகளை விருத்தி செய்வதிலும் எடுக்கப்படும் இம்முயற்சிகள், உதவி வழங்குவோரால் பொறுப்பேற்கப்படும் நிகழ்ச்சித்திட்ட அல்லது செய்திட்ட மதிப்பீடுகளின் வடிவத்தை எடுத்துள்ளன. (காண்க டானிஷ் சர்வதேச அபிவிருத்தி உதவி (DANIDA) மற்றும் சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான முகவர் நிலையம் (SIDA), அத்துடன் தனியொரு சூழ்நிலை அல்லது நெருக்கடி நிலைக்கான பரந்துபட்ட பதிற்குறிகளின் பல்வேறு உதவிவழங்குநர்களின் மதிப்பீடுகளூடாக இம்முயற்சிகள் எடுக்கப்படுவது மிக ஆபூர்வமே (போர்ட்டனும் ஏனையோரும் 1996, லவுட்சும் ஏனையோரும் 1998).



இவ்வாறான மதிப்பீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் அதேவேளையில் அவற்றின் தரம், நோக்கெல்லை, ஆழம் மற்றும் முறையியல் என்பன குறிப்பிடத்தக்கவகையில் தொடர்ந்து மாறுதலுக்குட்படுகின்றன. நீல்ஸ் டபெல்ஸ்ரைன் என்பார் இந்நிலைமையை முறையியளாலரின் குழப்பநிலையென்று வருணித்துள்ளார் (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு (OECD) 1999). வரலாற்று ரீதியாக, மனித நேய உதவியானது அபிவிருத்தி உதவியைவிடக் குறைவான கண்டிப்பும், விரிவான கண்காணிப்பும் கொண்ட மதிப்பீட்டு முறைமைகளுக்கு உட்படுத்தப்பட்டுவந்துள்ளது (OECD 1999, 2). இதனோடு சேர்த்து, மோதுகைத் தீர்வு மற்றும் சமாதான உருவாக்கம் என்பவற்றுக்கான மதிப்பீடுகள் மேலும் பின்னிலையிலுள்ளன என்று ஒருவர் சொல்லக்கூடும். ஒப்பீட்டளவில் பார்க்கின்ற சமாதான உருவாக்கத்தில் ஈடுபடும் செயற்பாட்டாளர்கள் அல்லது அமைப்பாளர்கள் சமீபத்தில் தான் இவைகுறித்து அக்கறைகொள்ளவே தலைப்பட்டுள்ளார்கள். அவ்வாறு அக்கறைகொண்டவர்கள் அத்தகைய மதிப்பீடுகளைப் பொருத்தமற்றவையென்றோ அல்லது உதவி வழங்குநர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மட்டும் நிறைவேற்றப்பட்டுவரும் தேவையற்ற ஒரு சுமையென்றோ அல்லது பண்புகெட்ட கீழ்த்தரமான தீர்ப்புகளை வெளியிடுவதில் ஈடுபடுவதற்காக விடயம் அறியாத வெளியிடத்து ஆலோசனை தருநர்கள் ஊக்குவிக்கப்படுகிற நடைமுறைகளின் அபாயகரமான ஒரு தொகுப்பென்றோகூடப் பெரும்பாலும் கருதுபவர்களாக இருந்தனர்.

**பெட்டி 1: நடைமுறையிலுள்ள PCIA செய்திட்டங்கள்**

**அபிவிருத்திகளுக்கான பங்களிப்பைச் செய்பவை பின்வருமாறு:**

- மனிதநேய செயற்பாட்டில் கணக்கு கூறும் பொறுப்புக்கும், நிறைவேற்றுத்திற்குமான செயல் வீச்சு மிக்க கற்கை வலையமைப்பு (ALNAP); கடல்கடந்த பிரதேச அபிவிருத்தி நிறுவகத்தைத் தளமாகக் கொண்டது (ஐக்கிய இராஜ்சியம்)
- கிளின்ஜென்டேல் நிறுவகம் (நெதர்லாந்து)
- இன்டர்நாஷனல் அலேர்ட் (ஐக்கிய இராஜ்சியம்)
- சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (DFID/INTRAC (ஐக்கிய இராஜ்சியம்)
- மேரி அன்டர்சனின் உடனிணைக்கும் அபிவிருத்திக்கான செயற்பாடு (கேம்பிரிஜ்,ஐக்கிய அமெரிக்க)

  சமாதான நடைமுறைகுறித்த சிந்தனை சமாதானத்துக்கான உள்ளூர் இயலுமைகள் செய்திட்டம் என்பதனையொட்டி இது நிறுவப்பட்டது.
- சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் (IDRC கனடா)
- மோதுகைத் தடுப்புக்கும் மாற்றுநிலையாக்கத்திற்குமான ஐரோப்பிய அரங்க மேடை (நெதர்லாந்து)
- பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைப்பு (OECD)/ அபிவிருத்தி உதவிக்குழு




மோதுகைத்தீர்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக்கொண்ட இடையீடுகளும், அ.சா.நிறுவனங்களும் அதிகரிக்கையில் அவை அனுகூலமான பெறுபேறுகளைக் கொண்டனவா என்பதை அறிவதிலான ஆர்வமும் அதிகரிக்கின்றது. இத்தகைய நடைமுறை சம்பந்தமாக அனுபவ சான்றுகள் உள்ள அதேவேளையில், இந்நடவடிக்கைகளின் தாக்கம் சம்பந்தமான முறையான அறிவின் அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தலை நாம் இப்பொழுதுதான் பார்க்கத் தொடங்குகின்றோம். பொருத்தமான மதிப்பீட்டு முறையியல்கள் வளர்ச்சி செய்யப்படுதல், கொடையாளர், பயில்வாளர்கள் மற்றும் இறுதிநிலை பயன்படுத்துநக்கு உகந்ததாகும்: சிக்கலான செயற்படுத்துநர்கள் பலரைக்கொண்ட பல மோதுகைத்தீர்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளின் இடை நிலைத் தொடர்பு குறித்த முறையியல்கள் பின்வரும் வினாக்களை எழுப்புதல் வேண்டும். இடையீடுகளின் விரும்பிய விளைவுகள் எவை? அவை வெற்றி அளித்தனவா? எந்தச் சூழ்நிலைகளில்? தோல்வி அடைந்தால் மற்ற விளைவுகளை ஏற்படுத்தியது ஏன்? அளவுகோல்கள், நியமங்கள், சுட்டிகள் எவை? விரும்பிய விளைவுகளின் கண்டுணர முடியாத தன்மை காரணமாக மதிப்பீடு சாத்தியமா? இந்த சாத்தியங்களின் நோக்கம் PCIA முறையியல்கள் குறித்த தற்போதைய முயற்சிகள் அல்லது அணுகுமுறைகள் குறித்த ஒரு காட்சியை வழங்குவதாகும். அது PCIA குறித்த மூன்று அணுகுமுறைகள் சம்பந்தமாக ஒர பொதுப்பார்வையை வழங்கும். இவை நியமக் கொடையாளர் மதிப்பீட்டு அளவு கோல்களை வழங்குபவை, அபிவிருத்தியினதும் மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டமிடலும் சமாதானம் மற்றும் மோதுகைத்தாக்கத்தைக் கணிப்பிடக் கையாளும் முறையியலை விருத்தி செய்பவை, மற்றும் குறிப்பிட்ட மோதுகைத் தீர்வு மற்றும் சமாதான உருவாக்கக் குறிக்கோள்களுடன் அ.சா.நிறுவனங்களால் மேற் கொள்ளப்படும் இடையீடுகள் மீது தெளிவாக ஒருமுகமாகக் கவனம் செலுத்துபவை என்பனவாகும். இவற்றை ஒருங்கிணைந்த இயங்குநிலையிலுள்ள ஒரு முறையியலாக ஒன்றுதிரட்டு வதற்கான பிரச்சினைகள் மற்றும் அதன் நிகழும் சாத்தியங்கள் என்பவற்றின் மீதான சில கருத்துரைகளுடன் இக்கட்டுரை முடிவுறும்.

# 2. மரபுநிலை வழிப்பட்ட கொடைவழங்குணர்களை மதிப்பீடு செய்தல்

மதிப்பீடுகளுக்கான மேலாண்மை செலுத்தும் உதவி வழங்குநர் அணுகுமுறையானது செய்திட்ட சுழற்சி முகாமைத்துவத்துக்குள் (Project Cycle Management-PCM) அவற்றை நிறுத்துகின்றது. இந்த சொற்பிரயோகம் சுட்டும் விபரங்களும் அவற்றின் அர்த்த நெளிவு சுளிவுகளும் கொடைவழங்கும் நிறுவனங்களக்கு ஏற்ப வேறுபடும் எனினும், இந்த செய்திட்ட சுழற்சி முகாமைத்துவத்துமானது சில அடிப்படை அம்சங்களை தவறாது கொண்டிருக்கும். அவையாவன, செய்திட்ட அடையாளம் காணுகையும் வடிவமைப்பும், செய்திட்ட அடையாளம் காணுகையும் மதிப்பிடுகையும் ஆகும். இவை தமக்கான அசைவியக்கத்தை கொண்டவையாகவும் ஒன்றுடன் ஒன்று ஊடாடுபவையாகவும் இருக்கம் என கூறுவர். (வரைபடம் ஒன்றை-1ஐ பார்க்க)

உரு 1 செய்திட்ட வட்டம்




இது போன்ற செய்திட்டங்களை பின்னொரு காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான அனுபவத்தையும் இந்த செய்திட்டத்திலேயே திருத்தப்பட வேண்டிய அம்சங்களை மனத்திருத்தி இச் செய்திட்டங்களை பகுப்பாய்வு செய்வதே மதிப்பிடுகையின் இயல்பும், நோக்கமுமாக அமையும். (ஐரோப்பிய ஆணைக்குழு 1993, 12)

ஆனால் இந்த யதார்த்தபூர்வ உண்மை நிலையோ பெரும்பாலம் வேறுபட்டதாகும்-அது நேர்கோட்டு பண்பினதாகவே இருக்கும். செய்திட்ட சுழல்வின் முடிவிலேயே மதிப்பீடுகள் பெரும்பாலும் இடம்பெறும். ஆயினும், சிந்தனாபூர்வமாக இத்தகைய செய்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் கொடைவழங்கு நிறுவனங்களையும் அல்லது செயற்படுத்தும் நிறுவனங்களையும் பொறுத்தளவில் இத்தகைய மதிப்பிடுகையின் ஒட்டுமொத்த தன்மையானது தொடர்ச்சியான கண்காணிப்புக்கும் அன்றேல் வரவிருக்கம் நிகழ்ச்சி அமைப்புக்கான வழிகாட்டற் குறிப்புகளாகவும் பயன்படுத்த தக்கவையாகும். எனினும் வெவ்வேறு நிறுவனங்களிலே காணப்படுகின்ற நடைமுறைகள் பெரும்பாலும் ஒரு நிறுவனத்தின் அனுபவத்தை இன்னொன்று பெறுபதற்கான இடத்தை கொடுக்காதவையாக அமையும். அது மாத்திரமல்லாமல் ஒரு செய்திட்டம் பற்றி கிடைத்துள்ள ஆழ்நிலை பெற்ற படிப்பினைகள் இன்னொரு செய்திட்ட உருவாக்கத்துக்கோ நடைமுறைப்படுத்துவதற்கோ ஆன வாய்ப்புக்களை பெரும்பாலும் வழங்குவதில்லை. "கூட்டு மதிப்பீட்டுத் தொடர் செயற்பாட்டுக் கண்காணிப்பும், அனுசரனைபடுத்தல் வலையமைப்பும்" (Joint Evaluation Follow up Monotoring and Facilitation Network-JEFF) என்பது மதிப்பீடுகளுக்கான தொடர் செயற்பாட்டை நிறுவமையப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஆர்வத்தைத் தூண்டவல்ல ஒரு முயற்சியாகும். இது, அறிக்கையின் பரிந்துரைகள் கருத்தார்ந்த விதத்தில் நோக்கப்பட்டுச்

செயலாண்மையுறச் செய்யப்படுவதை உறுதி செய்யும் நோக்குடன் ருவாண்டா கூட்டு மதிப்பீட்டின் பின்னர் ஏற்படுத்தப்பட்டதாகும். மற்றுமொரு உதாரணமாக சூடானின் செய்பணிக்கான உயிர்த்துணை கூட்டுநிறுவனமானது- (Operation Lifeline Sudan Consortium) மேற்கொண்ட காலாண்டுக் கண்காணிப்பைக் குறிப்பிடலாம். (காண்கOECD 1999, 27) உதவி வழங்கும் முகவர் நிலையங்கள் பல தமது சொந்த உள்ளக மதிப்பீட்டுப் பிரிவுகளைக் கொண்டிருக்கையில், இப்பணியை நிறைவேற்றுவதற்கு வெளியிலுள்ள நிபுணத்துவ ஆலோசகர்களை அமர்த்துவதையே பெரிதும் காணக்கூடியதாயுள்ளது. உண்மையில் உதவி வழங்குநரால் முன்னிலைப்படுத்தப்படும் இக்கோரிக்கைக்கான பதிற் குறியாகத் தொழில்சார் தகைமை கொண்ட மதிப்பீட்டாளர்களைக்கொண்ட "சிறிய குடிசைக் கைத்தொழிலொன்றே" இப்போது உருவாகியுள்ளது. காலவோட்டத்தில் இந்த மதிப்பீட்டு முறையியல் அந்த தரப்படுத்தப்பட்ட முறையியலும் அவற்றக்கான உரைகல்லும் வந்து இணையும் ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

நியமப்படுத்தப்பட்ட முறையியல் மற்றும் அளவுகோல்களின் தொகுதி என்ற விடயத்துக்கு அணித்தாயுள்ள ஒருவிடயமாக இது உருப்பெற ஆரம்பித்துள்ளது. DANIDA மற்றும் SID வில் பல்வேறு மதிப்பீடுகளின் அடிப்படையிலும் OECD இன் அபிவிருத்தி உதவிக்குழுவின் (OECD/DAC) வழிகாட்டல்களினதும் அடிப்படையிலும் அடிக்கடி பெரிதும் விதந்து கூறப்படுகின்ற அளவு கோல்கள் பின்வருமாறு.

1. **தாக்கமும், அதனுள் வருவனவும்**

செய்திட்ட நடவடிக்கைகளின் பின்விளைவுகளான நீடித்து நிலவுகின்ற மாற்றங்களை இது அளவிடுகிறது. நடவடிக்கை ஏற்படுத்திய உண்மையான மாற்றமென்ன, யாருக்கு அந்த மாற்றம் என்ற வினாவை இது ஆராய்கின்றது. தாக்கங்கள் நேரடியானவையாக அன்றேல் எதிர்மறையானவையாக இருக்கலாம், திட்டமிட்ட அல்லது திட்டமிடப்படாததாக இருக்கலாம், உடனடியாக ஏற்படுவதாகவோ அல்லது நீண்டகாலத்தில் ஏற்படுவதாகவோ இருக்கலாம், அத்துடன் நுண்ணியல்பு, இடைநிலை அல்லது பேரியல்பு மட்டங்களில் இடம்பெறலாம். அதனுள் வருபவை, குறிப்பிட்ட துறைகளில் (உ-ம் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சூழல் துறைகள்) அல்லது இலக்குக் குழுக்களில் (உ-ம் தனிநபர்கள் மற்றும் முதியோர், சிறுவர், பெண்கள் போன்ற குறிப்பிட்ட சமூகக் குழுக்கள் அல்லது சமூகங்கள் மற்றும் நிறுவனங்கள்) அல்லது இரண்டிலும் காணப்படக்கூடிய தாக்கங்களின் வேறுபட்ட தன்மையைக் குறிக்கின்றது.

2. **இயைபும், பொருத்தப்பாடும்**

முன்னைய அளவுகோலானது, ஒரு செய்திட்டத்தின் ஒட்டுமொத்தக் குறிக்கோளும், நோக்கமும் எவ்வளவு தூரத்திற்குக் கொள்கைத் தேவைப்பாடுகள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றுடன் இசைவுடையதாயிருக்கின்றன என்பதை மதிப்பீடுசெய்கின்றது. பின்னைய அளவுகோலானது, செய்திட்ட நடவடிக்கைகள் உள்ளூர்த் தேவைகளுக்குச் சரியாகப் பொருந்தும்வகையில் உள்ளதா என்பதை மதிப்பீடு செய்யும் அதேவேளையில், நடவடிக்கைகள் மற்றும் உள்ளீடுகளின் மட்டங்கள் என்பவற்றின்மீது கவனத்தை முனைப்புறுத்துகின்றது. இவ்வேறுபாடானது ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டம் அல்லது செய்திட்டக் குறிக்கோள் தொடர்புடையதாயிருக்கையில், தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் அல்லது செய்திட்டங்கள் அதிகூடிய பொருத்தப்பாட்டுடன் இருக்கவில்லை, அத்துடன் அதைவிடச் சிறந்த மாற்றீடுகள் இனங்காணப்பட்டிருக்கலாம் அல்லது இனங்காணப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவுக்கு வரும் வகையில் மதிப்பீடொன்றை அனுமதிக்கின்றது.

3. **பயனுறுதியும், வினைத்திறனும்**

ஈட்டப்பட்ட விளைவுகள் திட்டமிட்ட மட்டத்துக்கு உள்ளனவா என்பதையும், வழங்கப்பட்ட மூலவளங்களின் மட்டத்தினுள் உச்ச விளைவுகள் அடையப்பட்டனவா என்பதையும் இது அளவிடுகிறது. வேறு வகையான உள்ளீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இதே விளைவுகள் அல்லது இதைவிடச்சிறந்த விளைவுகள் ஈட்டப்பட்டிருக்கக்கூடுமா என்ற ஒரு தீர்மானத்திற்கு வர இது வழிசெய்கிறது.

**4. காலப்பொருத்தம்**

நடவடிக்கைகள் மிக வாய்ப்பான அல்லது பொருத்தமான வேளையில் முன்னெடுக்கப்பட்டனவா?

**5. பேண்தகுதன்மை**

கொடைவழங்குநரின் நிதியளித்தல்கள் மீளப்பெறப்பட்டபின்னர் செய்திட்டத்தின் தாக்கம் எதுவரை தொடரக்கூடியதாயிருக்கும் என்பதை இது அளவிடுகிறது. செய்திட்டத்தை சார்ந்ததாக இருப்பதற்கு நீண்டகாலத் தவணைமீது இது தன் கவனத்தை முனைப்புப்படுத்துகிறது. உள்ளூர் அதிகாரக் கட்டமைப்பு இயக்கவியல் மற்றும் சமூக மூலதனம் என்பவற்றின்மீதான தாக்க சாத்தியப்பாடுகளை அது முக்கியப்படுத்துவதுடன், வெளிச்செயற்பாட்டாளர்களுக்கும் உள்ளகக் கட்டமைப்புகள், முறைவழிகள் அல்லது அமைப்புகள் என்பவற்றுக்கிடையேயுள்ள தங்கியிருக்கும் நிலைமைகளை (நிதிகள், மூலவளங்கள், கருத்துகள் அல்லது செயல்முறைகள் தொடர்பில்) உருவாக்குவது குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டிய தேவையையும் அது வலியுறுத்துகின்றது (எபட்டா 1999).

**6. இயைபுத்தெளிவு, ஒருங்கிணைப்பு மற்றும் துணைநிலை**

நிகழ்ச்சித் திட்டங்கள், செய்திட்டங்கள் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றின் நோக்குகளும், விளைவுகளும் ஒன்றுக்கொன்று இடையூறுசெய்தல் அல்லது ஒன்றையொன்று பலவீனப்படுத்தல் என்னும் நிலையை விடுத்து, மதிப்பீடானது ஒன்றையொன்று பலப்படுத்துவதை நிச்சயப்படுத்தும் வகையில் எந்த அளவுக்கு அவை வடிவமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இந்த விடயப் பரப்பெல்லைகள் ஒவ்வொன்றுக்கமான மதிப்பீடுகளை விருத்தி செய்கையில், மதிப்பீட்டாளர்கள் தமது பதிவேட்டாளர் முறைமையை நாடலாம்.

குறித்த செய்திட்டத்துக்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதன் திட்டமிடப்பட்ட விளைவுகள், இவ்விளைவுகளை அடைவதற்கான நடவடிக்கைகள், இந்நடவடிக்கைகளுக்கான மனித மற்றும் பொருள்சார் உள்ளீடுகள் மற்றும் விரும்பப்பட்ட விளைவுகளை அடைவதை நோக்கிய அவதானித்துச் செவ்வைபார்க்கும் சுட்டிகள் (Obeservable Verifiable Indicators-OVI கள்) என்பவற்றுக்கான பகுத்தறிவுசார் நியாயங்களை இது அவர்களுக்கு வழங்கும். தர்க்கவியல் கட்டுக்கோப்பானது, செய்திட்டத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதான வெளிவாரி பக்கவிளைவுகளிலிருந்து செய்திட்டத்துக்கு முன்னால் எழும் இடர்களையும் இனங்காணுகின்றது. மேற்காட்டிய அளவு கோல்களுக்கிடையே வெளிப்படையான தொடர்புகள் உள்ளன.



தாக்கங்களின் மதிப்பீட்டில் குறிப்பிட்ட அளவு முக்கியத்தைக் கொண்டிருப்பவை இந்த OVI களாகும். எண்ணற்ற தர்க்கவியல் கட்டுக்கோப்புப் பயிற்சிக் கையேடுகளில் (EC; DANIDA; DFLD) தொடர்புடைய OVI கள் பெரும்பாலும் தொகை, தரம், இலக்கு குழுக்கள், காலம் மற்றும் இடம் என்பவற்றை கொண்டே எடுத்துக்கூறப்படுகின்றன. அதாவது விநியோகிக்கப்படும் உற்பத்திப்பொருளின் தொகை மற்றும் தரம், யாருக்கு அது விநியோகிக்கப்படுகின்றது, எப்போது, எங்கே மற்றும் என்ன தாக்கத்தை ஏற்படுத்துமென்ற எண்ணத்தோடு விநியோகிக்கப்படுகின்றது என்பவற்றைக் காட்டுவதாகவே அவை பொருள் கொள்ளப்படுகின்றன.

இதற்கு மாறுபட்டவிதமாக, பொருத்தமான சுட்டிகளை இனங்காண்பது எவ்வளவு கடினமானது. குறிப்பாகத் எண்ணிக்கையோடு சம்பந்தப்படாமல், தரத்தோடு சம்பந்தப்பட்டதாக அவை இருக்குமானால் எவ்வளவு கடினமானது என்பது பற்றிய நேரடி அனுபவத்தை, தர்க்கவியல் கட்டுக்கோப்பு அமைக்க எப்போதாவது ஈடுபட்ட எவரேனும் ஒருவர்தான் கொண்டிருப்பார். மனிதநேய களத்தினுள், SPHERE செய்திட்டத்தின் மூலமான தொடர்புடைய சுட்டிகளைத் தரப்படுத்தக் கணிசமான அளவு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. நீர் மற்றும் துப்புரவு ஏற்பாடு, உணவுப்பாதுகாப்பு, போஷாக்கு, சுகாதார சேவைகள், உறையுள் மற்றும் அதற்கான இடத்தெரிவு ஆகிய மனிதநேயப் பதிற்செயற்பாட்டின் ஐந்து முக்கிய

துறைகளில் குறைந்தபட்ச தரக்கட்டளைகளை விருத்திசெய்வதில் 225க்கும் மேற்பட்ட ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க அ.சா.நிறுவனங்களின் கூட்டிணைவு ஒன்றை அது ஈடுபடுத்தியது. அவசரகால நிலைமைகளில் தர்க்கவியல் கட்டுக்கோப்புகளை வரைவதில் அவை இப்போது பரவலாகப் பயன்படுத்தப்படுவதுடன், தொடர்ந்து வரும் மதிப்பீடுகளிலும் அவை பயன்படுத்தப்படவுள்ளன. ஆயினும் SPHERE செய்திட்டத்தில்கூட, மிகப்பெருந்தொகையான சுட்டிகள் எண்ணிக்கையோடு தொடர்புபட்ட பண்புகளையே கொண்டுள்ளன. இது (கூடாரங்களை விநியோகித்தல் மருந்துப் பொருட்கள் வழங்கல், பாதுகாப்பான நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு உட்கட்டமைப்பு என்பவற்றை வழங்கல் போன்ற) மனிதநேயப் பதிற் செயற்பாட்டின் பண்பினை ஓரளவுக்குத்தான் பிரதிபலிக்கின்றது. ஆனால், தர்க்கவியல் கட்டுக்கோப்பு முறையியல் மற்றும் நியமவடிவிலான உதவி வழங்குநர் மதிப்பீட்டு முறைவழிகள் ஆகிய இரண்டிலும் எதனை அடிப்படைப் பலவீனங்களெனப் பலரும் உணர்கின்றார்களோ அதற்கும் இது சான்று பகர்கின்றது.

மோதுகை இயக்கவியலின் தன்மை, வகை மற்றும் கட்டங்களை, சந்தேகத்துக்கிடமின்றி தர்க்கவியல் கட்டுக்கோப்புகளின் பயன்பாடு குறித்த சில நன்மைகளை வழங்கத்தான் செய்கின்றது. செய்திட்டத்தின் நோக்கங்களையும், குறித்துரைப்பான தலையீடுகளுக்கு வலுவளிக்கின்ற எடுகோள்களையும் தெளிவுபடுத்துவதற்கு இது உதவுகின்றது. திட்டமிட்ட நடவடிக்கைகளை விரும்பிய விளைவுகளுடன் உணர்வுபூர்வமாக இணைப்பதற்கும், ஒவ்வொன்றுக்கும் தேவைப்படுகின்ற வகை, வீச்சு மற்றும் உள்ளீடுகளின் அளவு என்பவற்றைத் தெளிவாக இனங்காண்பதற்குமான தேவையை இது முக்கியப்படுத்துகின்றது. மேலும் முக்கியமாக, இது செய்திட்ட பேண்தகு தன்மைக்கான தேவை மற்றும் சாத்தியங்களைச் சுட்டிக்காட்ட உதவும்.

ஆயினும், தர்க்கவியல் கட்டுக்கோப்புகள் மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. பலர் அவை அளவுமீறி வரைவுபடுத்துபவையென்றும், நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையங்களையும் புதிது புனைதலாகவன்றி இயந்திர ரீதியில் சிந்திக்க வற்புறுத்துபவையென்றும் எண்ணுகின்றனர். இது உள்ளீடுகள், செயற்பாடுகள் மற்றும் விளைவுகளிடையே நேர்கோட்டுப்பாங்கிலான காரண உறவுகளை வலுப்படுத்தும் அவற்றின் போக்கின் விளைவாகும்.



அளவிடக்கூடிய சுட்டிகளின் விடயத்திற்கு வருகையில், இந்தப் போக்குத்தான் தொகை மதிப்பீடக்கூடியவற்றின் மீது அழுத்தம் ஒன்று ஏற்பட வழியமைக்கின்றது. கொள்கையின் ஒட்டுமொத்தக் குறிக்கோள்கள் அல்லது நோக்கங்களைவிடக் செய்திட்டத்தின் மட்டத்தின்மீது அது தன் கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றது.

விளைவானது, இடர்கள் அல்லது தர்க்கவியல் கட்டுக்கோப்பில் இனங்காணப்பட்ட எடுகோள்கள்மீது முழுமையான ஈடுபாடுகொண்டிராத அசைவற்ற ஒரு பகுப்பாய்வாக இருக்கமுடியும். நிலவுகின்ற வாய்ப்புக்களுக்கு முக்கியத்துவமளிக்க அதிகம் விழைகின்ற ஒரு முறையியலாகவும் அது இல்லை. இவ்வாறு, தர்க்கவியல் கட்டுக்கோப்பு முறையியலின் பிரச்சினைக்குரிய இயல்பும், அமைப்பும் எப்போதுமே மாறாதவகையில் மோதுகைக்கு இட்டுச் செல்கின்றன. செய்திட்டமானது தனது நடவடிக்கைகள்மூலமாக நேரடியாகப் பரிகாரம் காணவிளையும் ஒருவிடயமாக நோக்கப்படுவதைவிட செய்திட்டமொன்றிற்கு சாத்தியமான பாரதூரமான ஒரு அச்சுறுத்தலை முன்னிறுத்தும் ஓரிடராகக் கருதப்படுகிறது. முறையியலின் உள்ளார்ந்த ஒரு பண்பாக இது அமையவில்லை, அது பயன்படுத்தப்படும் விதத்தில்தான் அது காணப்படுகிறதென அதன் சார்பாளர்கள் வாதாடலாம்.

OECD/DAC இன் மனிதநேய மதிப்பீட்டு முறையியல்பற்றிய சமீபத்திய பொதுவான அறிக்கையொன்று இவ்வரையறைகளில் சிலவற்றை அங்கீகரித்துள்ளதுடன், மதிப்பீடுகள் செய்திட்டம் மாத்திரம் என்ற குறுகிய குவியமையத்திற்கப்பால் சென்று, பரந்த, கொள்கைவழி திசைமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்றை விருத்திசெய்யவேண்டுமென்று வாதிடுகின்றது (DECD/DAC 1999). விரிவுபடுத்தப்பட்ட

இத் திசைமுகப்படுத்தலானது வெறுமனே தனித்தனிச் செய்திட்டங்களின் பகுத்தறிவுசார் நியாயம் மற்றும் நோக்கங்கள்மீதுமட்டுமன்றி, எதை முதலிடத்தில் வைக்கக்கூடிய பயன்தருவிடயங்கள் எனக் கருதுவதற்கு மதிப்பீட்டாளர்களை இட்டுச்சென்றதோ அந்த ஆணைகள், அடிப்படை நம்பிக்கைகள், எடுகோள்கள் மற்றும் கருத்துப்போக்குகள் என்பவற்றின்மீதும் கவனம்செலுத்தும். இவற்றுக்கிடையே நிலவக்கூடிய பதற்றங்களின் மேலும் முனைப்பான மதிப்பீட்டையும் குறிப்பிட்ட செய்திட்டங்களின் வெற்றிகரமான செயற்படுத்துகையையும் இது அனுமதிக்கும். இவ்வாறான அணுகுமுறையொன்றுகுறித்த ஒரு நிலைமையின் மாறுபடுந்தன்மை, சிக்கல்நிலை மற்றும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருக்கும் நிலை என்பவற்றையும், அதற்கான பதிற் செயற்பாட்டின் வீச்சையும் நன்கு பிரதிபலிக்கும் என்று வாதிடப்படுகின்றது.

காரண / காரியத் தொடர்புகள்மீதான குறுகிய நேர்கோட்டிலான குவிகவனத்திலிருந்து நிகழ்வுகளின் இழையோட்டமான கதைவடிவான அறிக்கைகள், முறைவழிகள் மற்றும் அமைப்புகள் என்பவற்றை நோக்கிய கவனத்துக்கு விலகிச்செல்கையில், ஒரு மதிப்பீடானது சான்றாதாரத்தைவிட அதன் செல்லுபடித் தன்மையையே நோக்குகின்றது. பரந்த கொள்கை மட்டத்தை நோக்கித் திசைமுகப்படுத்தப்பட்ட இவ்விலகலானது, மோதுகை இயக்கவியல் மற்றும் சமாதானத்தை உருவாக்கும் சந்தர்ப்பங்கள்பற்றிய கொள்கையின் தாக்கத்தின் மீதும் அதிக உபாயம் சார் மதிப்பீடொன்றிற்கான அடிப்படையை வழங்கும் அதேவேளை செய்திட்டமட்டத்திலான மதிப்பீடுகளில் இது ஓர் இடைவெளியை ஏற்படுத்தத்தான் செய்யும். மேலும் அபிவிருத்திக்கும், மனிதநேயத்துறைகளுக்குமெனத் தரப்படுத்தப்பட்ட அளவுகோல்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதில் PCIA உடன் தொடர்புபட்டதாகவும், உதவிபுரிவதாகவும் அநேக விடயங்கள் இருந்தாலும், PCIA க்கெனத் தனித்துவமான செயற்படுமுறையியல் ஒன்றின் உருவாக்கத்துக்கான தகுந்த ஓர் அத்திவாரத்தை இவைகள் தாமாக வழங்கமுடியாது.

## 3. அபிவிருத்திச் செய்திட்டங்கள், மோதுகை மற்றும் PCIA



செயலுறத்தக்க PCIA முறையியலொன்றை விருத்திசெய்வதற்கு எடுக்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க முயற்சிகளுள் ஒன்றாக விளங்கியது கென் புஷ்ஷின் “சமாதானத்துக்கான ஓர் அளவீடு” (1998) என்னும் கட்டுரையாகும். கனேடிய சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் (IDRC) சமாதான உருவாக்கம் மற்றும் புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்துக்காக உருவாக்கப்பட்டதாகும். சிந்தனைபூர்வமானதும், ஆர்வத்தைத் தூண்டுகின்றதுமான இக்கட்டுரையில், PCIA முறையியல்களை விருத்திசெய்வதில் எடுக்கப்பட்ட முயற்சிகள் அடிப்படையான ஒரு தப்பெண்ணத்தை இன்றியமையாததாக்கின என்று புஷ் வலியுறுத்துகின்றார். பெரும்பாலான அணுகுமுறைகள் சமாதான உருவாக்கத்தை ஒரு தாக்கமாகக்கருதாமல் அதையொரு விசேட வகையான செயற்பாடு எனக் கருத விழைவனவாக இருப்பதையே சிக்கலானதென அவர் அடையாளங்காண்கிறார்.

புஷ் (1998,7) PCIA ஐப் பின்வருமாறு வரையறுக்கின்றார்:

*பின்வரும் விடயங்கள்பற்றி முன்மொழியப்பட்ட மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட செய்திட்டங்களின் தாக்கங்களை (கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாக) மதிப்பீடு செய்வதற்கும் (இயலுமானவரை நிகழக்கூடிய விடயங்களை) எதிர்பார்ப்பதற்குமான ஒரு வழிவகையாகும் : 1) சமாதான சகவாழ்வுக்கான சாத்தியப்பாடுகளை வலுப்படுத்துகின்றதும், வன்முறை மோதலின் திடீர் எழுச்சி, மீள்நிகழ்வு அல்லது தொடர்ச்சி என்பனவற்றின் நிகழத்தக்க நிலையைக் குறைக்கின்றதுமான கட்டமைப்புகள் மற்றும் முறைவழிகள் 2) மோதுகைகளுக்கு வன்முறை வழிவகைகள் மூலம் தீர்வுகாணப்படும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கின்ற கட்டமைப்புகள் மற்றும் செயற்பாடுகள்*

இவ்வாறான வினாக்களுக்கு விடைபகிர்வதற்கான பகுப்பாய்வுக்கருவிகளை விருத்திசெய்வதை ஒப்பேற்றாவிடில், எமது செயற்பாடுகளின் தாக்கங்களை நிரற்படுத்த அல்லது அவை நேர்நிலையானவை அல்லது எதிர்நிலையானவையென வலியுறுத்தி அல்லது ஊகிக்கமட்டுமே நாம் எதிர்பார்க்கமுடியும் (Bush 1998, 4) சமாதான உருவாக்கம் என்பது ஒருதாக்கமே என்ற புஷ்ஷின் மீள்நிலைப்பாடும், PCIA இன் தன்மை மற்றும் நோக்கம் என்பவை குறித்த அவரது பண்புசார் விபரிப்பும் அநேக சுவாரஷ்யமான தாற்பரியங்களை உண்டுபண்ணுகின்றன. முதலில், அமைவிடம் குறித்து வலியுறுத்தப்படுகின்றது. மோதுகை மற்றும் சமாதான உருவாக்கம் என்பவற்றின் தாக்கங்களை எங்கே காண்பது என்பதை அதாவது எந்த சமுதாயத்தில், துறைகளில் மற்றும் மட்டங்களில் என்பதை-நாம் அறிந்தாக வேண்டும்.முதலாவதிலிருந்து பின்தொடரும் இரண்டாவது தாற்பரிய விடயம் யாதெனில் அதாவது, பொருத்தமான சுட்டிகளை விருத்திசெய்வது ஒரு முக்கிய பணியாக இருக்கும் அதேவேளையில், எந்த நிபந்தனைகளின்கீழ் இந்தத் தாக்கங்கள் நிகழக்கூடும் என்ற புரிந்துணர்வை விருத்தி செய்தலும் சமஅளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். PCIA ஆனது சூழமைவு குறித்து எப்போதும் உணர்வுடையதாயிருக்கவேண்டும் என்பது இதன் பொருளாகும். (உதாரணமாக, நீடித்த, முன்னேறாது முடங்கியுள்ள அல்லது வெளிப்படாது மறைந்துள்ள நிலைகளிலான மோதுகை கொண்ட நேரடி இராணுவரீதியான வன்முறையின் சூழ்நிலைக்குள் நிகழ்ச்சித்திட்டமானது இடம் பெறுகின்றதா என்ற கேள்வியும் இதில் அடங்கியுள்ளது).

மூன்றாவது தாற்பரியம் யாதெனில், அபிவிருத்திச் செய்திட்டங்களுக்கும், சமாதான உருவாக்கச் செய்திட்டங்களுக்குமிடையேயான திட்டவட்டமான வரையறையை வலுவிழக்கச் செய்தலாகும். புஷ்ஷைப் பொறுத்தவரையில், நல்லாட்சிமுறையின் பரப்புகளில் வெளிப்படையாக அரசியல்தன்மை கொண்ட செய்திட்டங்கள் மட்டும் என்றில்லாமல், அனைத்து அபிவிருத்திச் செய்திட்டங்களுமே ஓர் உள்ளார்ந்த ஆற்றலை அல்லது உண்மையான சமாதான உருவாக்கத் தாக்கத்தைக் கொண்டுள்ளன.



நான்காவதாக, பின்வரும் இரண்டுவிடயங்களிடையே வேறுபாட்டைக் காணவேண்டிய அவசியம் குறித்து புஷ் வலியுறுத்துகின்றார். ஒன்று, நிகழக்கூடிய தாக்கங்களை முன்கூட்டியே எதிர்பார்க்கின்ற செய்திட்டத்திற்கு முன்னரான மதிப்பீடுகள், மற்றையது உண்மையான தாக்கத்தை மதிப்பீடுசெய்வதும், குறுகிய அபிவிருத்தியின் சார்பில் அவ்வாறு செய்யாமல் விடுவதும் மற்றும் அதைவிடப் பரந்த சமாதான உருவாக்கலின் தாக்கத்தை நோக்கியதாய் இருப்பதுமான செய்திட்டத்தின் பின்னரான மதிப்பீடுகள். இது மிகவும் முக்கியமானதென வாதம் செய்கிறார் புஷ். ஏனெனில் மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்திசார் அளவுகோல்களின் பிரகாரம் தோல்வியைத் தழுவும் கருத்திட்டமொன்று, பரந்த அளவிலான சமாதான உருவாக்க அளவுகோல்களின் பிரகாரம் வெற்றியை அடையலாம். (அத்துடன் மறுதலையாக) முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்திசார் அளவுகோல்களின் பிரகாரம் வெற்றியடையும் செய்திட்டமொன்று சமாதானத்தின் மீதான நன்மைதரு தாக்கங்களின் தொடர்பில் தோல்வியடையலாம் (Bush 1998, 6).

பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் தனது இலக்குகளை அடைவதில் தோல்விகண்ட கல்விச் செய்திட்டமொன்று, குழுக்கள் / சமூகங்களுக்கிடையேயான பதற்றங்களைக் குறைப்பதில் வெற்றியடைந்தமையை புஷ் ஓர் உதாரணமாக வழங்குகின்றார். குறுகிய சொற்பதங்களில் அத்தகைய ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஒரு தோல்வியாகவே கருதப்படும், ஆனால் சமாதான உருவாக்கத்தின் பரந்த சொற்பிரயோகத்தின்படி அதுவொரு வெற்றியாகும். இதற்கு நேரெதிரான விடயமும் இங்கு நன்கு பிரயோகிக்கப்படமுடியும் என்று புஷ் சுட்டிக்காட்டுகின்றார். பெரும்பாலான மாணவர்கள் தமது பரீட்சைகளில் சித்தியடைந்திருக்கையில், சமூகத்திற்கிடையேயான பதற்றங்கள் மேலும் மோசமடையக்கூடும், குறிப்பாக, அவர்கள் அனைவருமே குறிப்பிட்ட ஒரு குழுவைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அல்லது சமூகத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்தவர்களாயிருந்தால், தாம் ஓரங்கட்டப்படுகிறோமென்ற புலனுணர்வு மேலும் வலுப்பெறுகையில் இது நிகழக்கூடும். இவ்வாறாக,

நேர்நிலைப்பட்ட அபிவிருத்திசார் விளைவுகள் எதிர்நிலையிலான சமாதான உருவாக்கத்தில் பின்விளைவுகளை உண்டுபண்ணக்கூடும்.

செய்திட்டத்திற்கு முன்னரான மதிப்பீட்டை, மோதுகைச் சூழலின் இயக்கவியல் மற்றும் முன்மொழியப்பட்ட செய்திட்டத்தின் மீது நிகழக்கூடிய தாக்கம் என்பனவற்றை சோதனைசெய்யும், நுணுகித் தேர்ந்தெடுக்கும் ஒரு செயற்பாடாக புஷ் சித்தரிக்கின்றார் (Bush 1998, 12-19). அத்தகையதோர் முன்கூட்டிய மதிப்பீட்டுக்காக அவர் அக்கறைக்குரிய நான்கு பரந்த விடயப்பரப்புகளை இனங்காண்கின்றார்: அமைவிடம், நேர முன்னேற்பாடு, அரசியல் சூழமைவு மற்றும் ஏனைய முக்கிய காரணிகள் என்பனவே அவையாகும். அவைகள், மோதுகையின் பொதுவான பண்புகள், அதன் இயக்கவியல், முன்மொழியப்பட்ட செய்திட்டப் பிரதேசத்தில் அரசியல் கட்டமைப்புகள், முறைவழிகள் மற்றும் தொடர்புகள் என்பவற்றின் மீதான அதன் தாக்கம் மற்றும் மனித மற்றும் சமூக மூலதனம் என்பனவற்றின் மீதான அதன் தாக்கம் என்பவற்றுக்கான பொதுவான அடிப்படையை வழங்குகின்றன. மோதுகை இயக்கவியலின் அத்தகைய பரந்த அளவிலான மதிப்பீடொன்று செய்து முடிக்கப்பட்டதும், மதிப்பீட்டாளர்கள் மூன்று குறித்துரைத்த வகைப்பிரிவிலான வினாக்கள் மீது தங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தவேண்டும்.

### 1. சூழல்சார் / சூழமைவுசார் சிந்தனைகள்

- குறைந்தபட்ச அளவில் முன்கூறக்கூடியதும், ஸ்திரம் மிக்கதுமான, அரசியல்ரீதியான, சட்டரீதியான , பாதுகாப்புக் கட்டமைப்புகள் உள்ளனவா? இக்கட்டமைப்புகளின் செயற்பாட்டுத் திறன்களுக்கு மோதுகையொன்று உண்டுபண்ணியிருக்கக்கூடிய சேதத்தினையும் மற்றும் சேதமட்டமும் செயற்பாடின்மையும், ஏற்கக்கூடிய இடரினைச் செய்திட்டத்திற்கு ஏற்படுத்துகின்றனவா என்பதையும் இது மதிப்பீடு செய்கிறது.



- உட்கட்டமைப்பு ரீதியான நிபந்தனைகள் யாவை? இருக்கின்ற, பழுதான அல்லது பழுதடைந்து வருகின்ற உட்கட்டமைப்புடன் இத்திட்டம் எவ்வாறு உருப்படப் போகிறது, அதன் அபிவிருத்திக்கு / புனர்நிர்மாணத்துக்கு எவ்வாறு அது பங்களிப்புச்செய்யப்போகின்றது என்பதை இது மதிப்பீடு செய்கிறது.

- வாய்ப்புக்கான சாளரங்கள் திறக்கின்றனவா அல்லது மூடிக்கொள்கின்றனவா? இது அரசியல், பொருளாதார மற்றும் சமூக இயக்கவியலின் தளர்ச்சி, வளர்ச்சியையும், செய்திட்டமொன்றை அவை அனுசரணைப் படுத்துகின்றனவா அல்லது தடைசெய்கின்றனவா என்பதையும் மதிப்பீடு செய்கிறது.

தென்னாபிரிக்காவில் நிறவெறிக்குப் பின்னரான அனுபவங்களை உதாரணமாகக் காட்டும் புஷ், திறந்த வாய்ப்புவள நிலையொன்று வெற்றிகரமான சமாதான உருவாக்கத்தின் தாக்கத்தை அவசியம் உறுதி செய்யும் என்று கூறிவிடமுடியாது என்கிறார்.

### 2. செய்திட்டத்திற்கேயுரிய சிந்தனைகள்

- மூலவளங்களின் சரியான கலவையைச் செய்திட்டம் கொண்டுள்ளதா?

- முன்னிலைவகிக்கும் அமைப்பு, பிரதேசத்தில் தேவைப்படும் அனுபவத்தை அல்லது ஒப்பீட்டளவிலான அனுகூலத்தைக் கொண்டுள்ளதா? செயற்படுத்துகின்ற அமைப்பின் முன் சாதனைகள் அதன் பாகஸ்தர் வலையமைப்பு, அந்த செய்திட்டத்துக்கு எந்த அளவுக்கு அது தன் தனித்துவமான ஆற்றல்கள், திறமை அல்லது நிபுணத்துவத்தைக் வழங்குகிறது என்பவற்றை இது மதிப்பீடு செய்கிறது.

- செய்திட்டத்தின் “சகிப்பு மட்டங்கள்” எவை? நிச்சயமற்ற தன்மை, தீர்மானமற்றதன்மை, இடர்சாத்தியப்பாட்டு ஆபத்து, இழப்புக்கள் மற்றும் மாற்றங்கள் என்பவற்றுக்குப் பதிற் குறி காட்டும் ஆற்றலை இது மதிப்பீடு செய்கிறது.

- பொருத்தமான ஆளணியினர் இருக்கின்றனரா? நுணுகிய தொழினுட்பத் திறமை, அரசியல் வாய்ப்பு அவகாசத்தைக் கண்டுகொள்வதற்கும், உருவாக்குவதற்கும், அதனுள்ளிருந்து அதைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குமான ஆற்றல் ஆகியவற்றை இது கணிப்பீடு செய்கிறது.

3. **செய்திட்டம் - சூழல் இவற்றின் இயைபு.**

- செய்திட்டத்துக்கான அரசியல் ஆதரவின் மட்டம் யாது? உள்ளூர், பிரதேச மற்றும் தேசிய அரசியல் செயற்பாட்டாளர்களிடமிருந்தும், ஆர்வங் கொண்ட (உதவி வழங்குநர், INGO க்கள், NGO க்கள் போன்ற)ஏனைய தரப்பினர்களிடமிருந்தும் கிடைக்கும் ஆதரவை இது அளவிடுகின்றது. ஒருவரின் சொந்த அமைப்பின் உள்ளேயிருந்து கிடைக்கும் ஆதரவையும் இது அளவிடுகின்றது.

- (தொடர்புடைய அதிகாரக் குழுக்கள் மற்றும் சமூகத்தின் நம்பிக்கை, ஆதரவு மற்றும் பங்கேற்பு என்பவற்றைச்செய்திட்டம் கொண்டுள்ளதா? செய்திட்டத்தின் பங்கேற்புப் பரிமாணங்களின் படிநிலை மற்றும் பண்பு என்பவற்றை இது கணிப்பீடு செய்கிறது.

- செய்திட்டம் நீடித்து நிலைக்கும் தன்மை கொண்டதா? செய்திட்டத்தைத் தொடர்ந்து நடாத்தத் தேவையான (நிறுவன ரீதியான, மனித மற்றும் நிதி) மூலவளங்களைத் தொடர்ந்து உருவாக்கும் இயலுமையை இது கணிப்பீடு செய்கின்றது.



மேற்கூறப்பட்ட அளவுகோல்கள், வினாக்கள் மற்றும் சார்புகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதும், செய்திட்டமொன்றின் நேரமுன்னேற்பாடு, கட்டமைப்பு அல்லது நோக்குகள் என்பனவற்றில் மாற்றம் ஏற்படுத்துவது அவசியமாகலாம். அதையடுத்து, திட்டமிட்டவாறு செய்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லல், மீளாய்வு செய்யப்பட்ட, வேறுபட்ட அல்லது முழுநிறைவாக்குகின்ற செய்திட்டத்தைக் கொண்டு அதை மாற்றீடுசெய்தல் ஆகிய செயற்பாட்டைப் புரிதல், அல்லது செய்திட்டத்தின் குறிப்பிட்ட நோக்குகளுக்கு மேலும் வாய்ப்பானதாக நிலைமை மாறும்வரை எதுவுமே செய்யாதிருத்தல் ஆகிய இரண்டில் ஒன்றைச் செய்வதற்கான தீர்மானமொன்றை எடுக்க முடியும். மிக முக்கியமாக, உண்மையான சமாதான உருவாக்கத்தின் தாக்கத்தை கணிப்பீடு செய்வதற்கான தளக் கோட்டையும் இது வழங்குகிறது.

செய்திட்டத்திற்குப் பின்னரான மதிப்பீடுகளைப் பின் தொடர்ந்து செல்வதில், எப்பரப்பிலிருந்து செய்திட்டமொன்றின் விரிவான சமாதான உருவாக்கத்தின் தாக்கத்தை ஆராய்வது உகந்ததோ அந்த நான்கு பரந்த பரப்புக்களை புஷ் இனங்காண்கிறார் (Bush 1998, 22-24).

1. **தனித்த அல்லது கூட்டான பொருள்சார் மற்றும் பொருள்சாரா மூலவளங்களை பெறுவதில் உருப்படியான அல்லது அரசியல் ரீதியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாற்றங்களைச் செய்திட்டம் விளைவித்ததா?**

உதாரணமாக, நீர், நிலம், உணவு, அரசியல் நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகள், பொருளாதார மூலவளங்கள், சமூக மற்றும் கலாசாரத் தகுதிநிலை, தகவல், சட்டபூர்வத் தன்மை, அதிகாரம் என்பவற்றை அடைவதை அது இலகுபடுத்தியுள்ளதா?

**2. சமூக பொருளாதாரப் பதற்றங்களைச் செய்திட்டமானது தோற்றுவித்ததா, அதிகரித்ததா அல்லது குறைத்ததா?**

பொருளாதார, கல்விசார்ந்த, விவசாயஞ்சார்ந்த மற்றும் கைத்தொழில் போன்றவற்றில் மற்றக் குழுக்களுக்கும் மேலாக ஒரு குழுவிடமுள்ள சிறப்புரிமையுடனான வாய்ப்பைப் பலப்படுத்த அது உதவியதா அல்லது இப்பரப்புக்களிலுள்ள அதிகாரப் படிநிலையமைப்புகளையும், சார்புநிலைகளையும் குறைக்க உதவியதா?

**3. பொருளாதார நிலைதகவின் அல்லது உணவுப் பாதுகாப்பின் பொருள் அடிப்படையிலான கணிசமான மாற்றங்களைச் செய்திட்டம் உருவாக்கியதா?**

உதாரணமாக, ஜீவனோபாயங்களை நேரடியாகப் பாதிக்கும் புதிய உத்திகளை / தொழில் நுட்பத்தை அது வழங்கியதா? சுயாதிக்க ஆக்கிரமிப்புணர்வுள்ள யுத்த சன்னத்த தளபதிகளின் தாக்கத்துக்கான சந்தர்ப்பங்களை மிகக்குறைந்த அளவுடைய தாக்குகின்ற அரசியல் பொருளாதாரத்தின் வாதத்தை அது பாதித்ததா? மன்களின் குடிநிலை மோதுகையின் அரசியல் பொருளாதாரங்களை அது உருவாக்கியதா (அண்டர்சன் 1999)?

**4. தற்போதுள்ள அரசியல், பொருளாதார மற்றும் /அல்லது சமூக முறைமைகளின் உள்ளடக்கம் அல்லது அவற்றின் மீதான கட்டுப்பாடு என்பவற்றுக்கான சாவால்களை அல்லது அவைபற்றிய மாற்றங்களைச் செய்திட்டம் உருவாக்கியதா?**

தமது வாழ்வின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக அம்சங்களை கட்டுப்படுத்துவதற்தும் ,தற்போதுள்ள கட்டுப்பாட்டு முறைமைகளுக்கும் சவால் விடுத்து, ஆட்சி முறைக்கான மாற்றீட்டு முறைமைகளை விருத்தி செய்வதற்கும், தனிநபர்கள் / குழுக்களுக்கு இச் செய்திட்டம் வலுவளித்ததா?



தமது அறிக்கையின் இறுதிப்பகுதியில், சரியான அமைவிடங்களைக் காண எம்மை இட்டுச்சென்று, சரியான வினாக்களை எம்மைக் கேட்கவைக்கக்கூடிய PCIA கட்டுக்கோப்பின் ஓர் உதாரணமாக ஐயத்திற்கிடமற்ற ஐந்து உசாத்துணைக் குறிப்புக்களை புஷ் இனங்காண்கிறார். (காண்க பெட்டி 2) சமாதானம் மற்றும் மோதுகை நிலைமைகள் மீதான கடந்தகால அல்லது உள்ளார்ந்த தாக்கத்தை கணிப்பீடு செய்வதற்கான அடிப்படையை இவை வழங்கும் (புஷ் 1998, 25,31). தமது வினாப்பட்டியல்கள் நிறைவானதாக இருப்பதைவிட, ஆலோசனைகளை வழங்கும் வகையில் அமைவதாகவே புஷ் குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட ஒரு மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட தெளிவான வினாக்கள் நிச்சயமாக, தெளிவான தாக்கங்களின் கணிப்பீடுபோல், ஒவ்வொரு செய்திட்டத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட வேண்டியனவாகவிருக்கும்.

அத்தகைய தாக்கங்களை அளவிடுவதற்கான அடிப்படையை வழங்கக்கூடிய சுட்டிகள் விடயத்திலும் இது உண்மையாகும். புஷ்ஷின் கூற்றுப்படி பயன்படுத்துநரால் கொண்டு நடத்தப்படவேண்டியவை ஆகும். செயற்படுத்தும் முகவர் நிலையமொன்று இனங்காணக்கூடியவற்றைவிட வேறுபட்ட வினாக்களையும், சுட்டிகளையுமே உதவி வழங்குநர்கள் கொண்டிருப்பர். தம் பங்கிற்கு இவையும், செய்திட்டமொன்றில் பெறுநர்கள் அல்லது பங்கேற்பாளர்கள் இனங்காணக்கூடியதாய் இருப்பதைவிட வேறுபட்டிருக்கும். காரணகாரியச் சுட்டிகள் எவ்வளவுக்கெவ்வளவு வெளிப்படுத்துகின்றவோ அவ்வளவுக்கவ்வளவு இருட்டடிப்பும் செய்படுகின்றன. மதிப்பீட்டுக்குள்ளாகியிருக்கும் செய்திட்டத்தைவிடப் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு முறைமையைப்பற்றியே அதிகம் பேசுகின்றன என்று புஷ் வாதிடுகின்றார். அவர் மதிப்பீட்டு முறைவழியொன்றில் வெவ்வேறு செய்திட்டங்களின் பாகஸ்தர்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் அனைத்து வேறுபட்ட தேவைகளையும் மேலும் சிறந்த விதத்தில் உள்ளடக்கக்கூடிய அடிக்கடிமாறுபடும் சுட்டிகளின் தொகுதியொன்று வேண்டும் என்கிறார்.

ஒப்பேறக்கூடிய ஒரு PCIA கட்டுக்கோப்பைத் தெளிவாக எடுத்தியம்புவதில் புஷ் எடுத்த முயற்சிகள் தொடர்பாகக் கவனத்துக்குரிய அநேக விடயங்கள் உள்ளன. முதலில், புஷ்வழங்குவது, விரிவகல்வான பொதுவான விடயங்களிலிருந்து மேலும் தெளிவாகக் குறிப்பிட்ட ஒரு விடயத்தை நோக்கி நகரும், பல்-அடுக்குகளாலான, எறத்தாழ பொருளுணர்த்தவல்ல PCIA கட்டுக்கோப்புகளின் ஒரு தொடராகும். ஆயினும், வெவ்வேறு கட்டுக்கோப்புகளுக்கிடையேயான தொடர்புகளின் துல்லியத்தன்மை முக்கியமாகத் தெளிவின்றிக் காணப்படுகின்றது. செய்திட்டத்துக்கு முன்னரான மதிப்பீடு, செய்திட்டத்துக்குப் பின்னரான மதிப்பீட்டுக்கான தளக்கோட்டை வழங்குமென புஷ் கருத்துத் தெரிவித்தாலும், செய்திட்டத்துக்கு முந்திய கட்டத்தில் இனங் காணப்பட்ட காரணிகளுக்கும், இறுதிப் பகுதியில் இனங் காணப்பட்ட PCI விடயப் பரப்புகளுக்குமிடையே ஒரு தயார்நிலை ஒத்திசைவோ அல்லது பரஸ்பரத் தொடர்பு நிலையோ இருப்பதாகத் தோன்றவில்லை (ஒப்பிடுக லியோன்ஹாட் 1999).

புஷ்ஷின் மேலும் தெளிவான கட்டுக்கோப்புக்கூட விரிவகல்வானதாகவும், பொதுவானதாகவும், மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விபரங்களை வழங்குவதாகவுமே இன்னும் காணப்படுகின்றது. இதை புஷ் தனது அணுகுமுறையின் ஆற்றல்களில் ஒன்றாகக் கருதுகின்றார். நிர்ணயிக்கப்பட்ட காரணகாரியக் காட்டிகள், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய செய்திட்டம் பற்றிப் பேசுவதைவிட மதிப்பீட்டு முறைமையைப் பற்றி அதிகம் பேசலாம் என்று அவர் வாதிடுவது சரியாக இருக்கும் அதேவேளையில், சுட்டிகள்பற்றிய தெளிவின்மையானது கணிப்பீட்டு முறைமையொன்றைப் பற்றி அதிகமதிகமாகப் பேச முடியும் என்பதும் உண்மையே. குறிப்பாக, உதவிவழங்குநர்கள், செயற்படுத்தும் முகவர் நிலையங்கள், பாகஸ்தர்கள், பங்கேற்பாளர்கள் அல்லது வெளியக மதிப்பீட்டாளர்கள் என்போரின், அத்தகைய ஒரு PCIA கட்டுக்கோப்பை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றலுக்குத் தடங்கலாயிருக்கலாம்.



**பெட்டி 2: சாத்தியவளச் சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தாக்கத்தின் பரப்புகள்**

| PCI விடயப் பரப்புகள் | உதாரணங்கள் |
|---|---|
| முரண்பாட்டு மோதலை முகாமை செய்வதற்கும் ¨அவற்றுக்குத் தீர்வு/ காண்பதற்கும், மற்றும் சகிப்புத்தன்மையை வளர்த்து சமாதானத்தை உருவாக்குவதற்குமான நிறுவன இயலுமை | சமாதனம் மற்றும் மாகை அறைகூவல்கள் மற்றும் வாய்ப்புகள் என்பவற்றை இனங்கண்டு பதிற்செயற்பாடு புரிவதற்கான இயலுமை மீதான தாக்கம் அமைப்புரீதியான பதில் செயல்புரியும் பண்பு, அதிகாரித்துவவாதம் குறித்த நெகிழ்ச்சித்தன்மை, வினைத்திறன் மற்றும் பயனுறுதி மாறுகின்ற சூழல்மற்றும் தேவைகளுக்கு பொருந்தும் வகையில் நிறுவன ரீதியான பாத்திரங்களையும், எதிர்ப்பார்ப்புகளையும் மாற்றியமைத்தல், நிதிமுகாமைத்துவம். |
| இராணுவ மற்றும் மனிதப்பாதுகாப்பு | வன்முறையின் மட்டம், பருமன் மற்றும் இயக்கவியல் என்பவற்றின் மீதான நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கம், வன்முறை நடத்தைப்போக்கு (விரிவகல்வாக விவரிக்கப்பட்ட) பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பின்மை, நாட்டின் பாதுகாப்பு / பாதுகாப்புக்கொள்கை, தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்பல் படையிலிருந்து விடுவித்தல் மற்றும் மீள் ஒருங்கிணைத்தல், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையினர் / கட்டமைப்புகளை மறுசீரமைத்து மீண்டும் பயிற்சியளித்தல், ஆயுதக்களவு, வழிப்பறித்திருட்டு, ஒழுங்கமைப்பாகப் புரியப்படும் குற்றங்கள் |

| PCI விடயப் பரப்புகள் | உதாரணங்கள் |
|---|---|
| அரசியல் கட்டமைப்புகளும், முறைமைகளும் | நாட்டின் அரசாங்க மட்டத்திலிருந்து மாநகரசபை மட்டம் வரையான அரசாங்கத்தின் இயலுமைகள் போன்ற முறைசார்ந்த மற்றும் முறைசாரா கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகள் மீதான தாக்கம், கொள்கையின் அளவும், செயற்படுத்தும் திறனும் அதிகாரத்தின் பரவலாக்கம்ஃ குவிப்பு, அரசியல் இனத்துவப்படுத்தல் பிரதிநிதித்துவம், வெளிப்படைத்தன்மை, வகைப்பொறுப்பு, ஜனநாயக பண்பாடு, உரையாடல், மோதுகையை இணக்குவித்தலும், மீளினக்கமும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை பலப்படுத்தல் / அரசியல் நகர்வு சட்ட விதிகள் மீதான தாக்கம் சட்ட முறையின் சுதந்திரம் / அரசியல் மயப்படுத்தல், மனித உரிமைகள் நிலைமைகள், தொழில் நியமங்கள். |
| பொருளாதாரக் கட்டமைப்புகளும், செயல்முறைகளும் | ஒப்புரவான சமூக பொளாதாரக் கட்டமைப்புகள்/ செயல்முறைகள், பலப்படுத்தல் அல்லது பலவீனப்படுத்தல் என்பவற்றின் மீதான தாக்கம், யுத்தப்பொருளாதாரங்களின் திரிவுபடுத்துகை / நிலைமாற்றம், பொருளாதார உட்கட்டமைப்புகள், அடிப்படைப்பண்டங்களின் விநியோகம், முதலீட்டு மூலதனம் கிடைக்கக்கூடியதாயிருத்தல், வங்கி முறைமை, வேலை வாய்ப்புத்தாக்கம், உற்பத்தித்திறன், பயிற்சி வருமானம் ஏற்படுத்தல், வர்த்தகப் பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தி, உணவுப்பாதுகாப்பின்மை மூலவளங்களின் சுரண்டல், உரவாக்கம் அல்லதவிநியோகம், குறிப்பாக, புதுப்பிக்க முடியாத மூலவளங்கள் மற்றும் பொருளாதாரத்தின் நீடித்த பேணுகை அல்லது உணவு பாதுகாப்பு என்பவற்றின் பொருள்சார் அடிப்படை என்பவை மீதான தாக்கங்கள். |
| சமூகப் புணர்நிர்மானமும், வலுவளித்தலும் | வாழ்க்கைத்தரம், ஆக்கபூர்வமான சமூகத்தொடர்புகள்(உ-ம் சகிப்புத்தன்மை, உட்பட்டிருத்தல் மற்றும் பங்கேற்பு கோட்பாடுகளை மேம்படுத்துபவை) இடம் பெயர்ந்த மக்கள் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூக சேவைகளின் நிறைவு, நலன்களின் ஒவ்வாமை, நம்பிக்கை / நம்பிக்கையீனம், குளுக்களிடையேயான பகைமை / உரையாடல் தொடர்பாடல்கள், போக்குவரத்து, மீள்குடியமர்த்தல், இடம்பெயர்தல், வீடமைப்பு, கல்வி, சமாதான பண்பாடொன்றை பேணி வளர்த்தல் என்பவற்றின் மீதான தாக்கம் |

ஒவ்வொரு சம்பவத்தின் அடிப்படையிலும் மதிப்பீட்டு அளவுகோல்கள் உருவாக்குமாறு விட்டுவிடும் தளர்ந்த அணுகுமுறைக்கும், முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முன்முடிவு செய்யும் சுட்டிகளின் தொகுதிக்குமிடையே சமநிலையொன்று பேணப்படுவது அவசியமாகின்றது. தேவைப்படுவது யாதெனில், துறைகள், மட்டங்கள், செய்திட்ட வகைகள் மற்றும் மோதுகை நிலைமைகள் என்பவற்றுக்குள்ளேயான சுட்டிகளைப்பற்றிக் கருத்துத்தெரிவிக்கின்ற விபரங்களுடனான, சுட்டிகளின் விரிவகல்வான மாதிரிப்படிவக் கோட்பாடுகளை விருத்திசெய்வதாகும். நல்லாட்சிமுறை மற்றும் மனித உரிமைகள் செய்திட்டங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சுட்டிகள்பற்றிய தனது ஆய்வில், ஆர்வத்தைத் தூண்டும் வகையில் புஷ் இதனைச் செய்ய ஆரம்பிக்கின்றார். (Bush 1998 21-22)

இரண்டாவது, புஷ்ஷினால் இனங்காணப்பட்ட ஐந்து விடயப்பரப்புகள் அல்லது துறைகள் PCIA முறையியலைச் சரியானதிசையில் வழிப்படுத்தத்தான் செய்கின்றன. இப்பரப்புகளின் துல்லியமான பண்பு விபரிப்பைப் பொறுத்தவரையில் வேறுபாடுகள் எழக்கூடும், அத்துடன் இவ் வகைபாடுகளை இனங்கண்டு உடன்பாடு காணுதலிலும் அவற்றின் உள்ளடக்கங்களுக்கு மெருகூட்டுவதிலும் பணியாற்ற வேண்டியுள்ளது. ஆயினும், இதில் சுவாரஸ்யமாக இருப்பது யாதெனில், இத்துறையில் எடுக்கப்படும் முயற்சிகள் யாவும், சமாதான உருவாக்கத்துக்கான மீளாய்வு செய்யப்பட்ட மனித பாதுகாப்பு அணுகுமுறையென விபரிக்கப்கப்படக்கூடிய ஒரு அணுகுமுறை ஒன்றன்பால் நமது கவனத்தை ஈர்க்கின்றது. (கொக்கெல் 1998 லியோன்ஹாட் 1999). நேரகால எச்சரிக்கை மற்றும் தடுப்புமுறைகள்மீதான ஐ.நா. மேலுத்தியோகத்தர் பயிற்சி நிலைய பயிற்சிநெறியானது மீளாய்வு செய்யப்பட்ட மனித பாதுகாப்பு அணுகுமுறையொன்றைப் பயன்படுத்துகின்றது. அது, 1. மனித உரிமையும் மற்றும் தனிமனித பாதுகாப்பும் 2.ஆளுகையும் அரசியல் முறைவழியும் 3.சமூக,சமுதாய நிலை ஸ்திரப்பாடு 4.சமூக பொருளாதார விடயங்கள், 5.இராணுவ 6.வெளியுறவு என்னும் ஆறு துறைகளை இனங்காண்கிறது. அசைவியக்க துடிப்புள்ள துறைசார் மோதுகைப் பகுப்பாய்வு, எதிர்கால நிகழ்ச்சிகளின் தோற்றப்பாடுகளின் உருவாக்கம் மற்றும் சமாதான உருவாக்கம் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைக்கான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் என்பவற்றை இனங்கண்டு ஈடுபடுவதற்கு அடிப்படைகளாக இவைகள் பயன்படுத்தப்படுகின்றன. (www.iteilo-it/UNSCP/ programmefocus/early warning).

லெயோன்ஹார்ட் தமது இன்டர்நேஷனல் அலேர்ட் எனும் அமைப்பிற்காகத் தயாரித்த அறிக்கையொன்றில் ஆளுகை, பொருளாதார, சமூக, கலாசார காரணிகள் மற்றும் பாதுகாப்பு என்னும் நான்கு விடயப்பரப்புக்களை இனங்காண்பதுடன், அவற்றை மோதுகைப் பகுப்பாய்வு, செய்திட்ட இடர் மதிப்பீடு, செய்திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கான சுட்டிகளை விருத்தி செய்வதற்கும் பயன்படுத்துகின்றார்.



தற்போதுள்ள நிலையின்படி புஷ்ஷின் கட்டுக்கோப்பின் உண்மையான குறைபாடு யாதெனில், துறைகளுக்கிடையேயான துடிப்பான ஊடாட்டங்களைப் பரிசோதிப்பதற்கு எந்த வழிவகையையும் அவர் வழங்கவில்லை என்பதாகும். குறிப்பிட்ட ஒரு PCI விடயப்பரப்பினுள் காணப்படுவதை அது திறந்து வெளியிடுவது மட்டுமல்லாமல், இவ்வேறுபட்ட விடயப்பரப்புகள் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள இடைத்தாக்கங்களின் தாற்பரியங்கள் என்ன என்பதையும் அது காட்டுகிறது. சமூக வலுவளித்தல் இராணுவ மற்றும் மனித பாதுகாப்பு என்பவற்றுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றது, எவ்வாறு பலப்படுத்துகிறது அல்லது வலுவிழக்கச்செய்கின்றது? ஏதேனும் ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு துறைக்கும் நாம் கொடுக்க வேண்டிய அது அதற்குரிய முக்கியத்துவம் யாது?

மூன்றாவது, சமாதான உருவாக்கத்திற்கான உள்ளார்ந்த ஆற்றலைக்கொண்டுள்ள அபிவிருத்திச் செய்திட்டங்களுக்கும், வெளிப்படையாகவே சமாதான உருவாக்கத்தில் அக்கறையுடன் ஈடுபடும் செய்திட்டங்களுக்குமிடையே வேறுபாட்டைக் காண வேண்டுமென புஷ் கூறினாலும், அவரது கட்டுக்கோப்பானது மேலே குறிப்பிட்டதற்கு பக்க சார்பாக அமைந்துள்ளது. அவர் பருவரையாக கூறியுள்ளவை யாவும் இல்லாவிட்டாலும், அதிகமானவை வெளிப்படையான சமாதான உருவாக்க நடவடிக்கைகளுடன் தொடர்புடையனவாகவே உள்ளன என்று புஷ் வாதிடக்கூடும் என்றாலும், அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செய்திட்டங்களின் தனித்துவங்கள் தெளிவான ஒரு அணுகுமுறையைத் தேவைப்படுத்துகின்றனவா என்பதை நாம் இன்னும் மிக விரிவாக ஆராயவேண்டியுள்ளது.

## 4. PCIA கட்டுக்கோப்புக்களை ஒன்றுடனொன்று இணைத்தல்

முறைவழி முறையியலை விருத்திசெய்து, அதைப் பயன்படுத்துவதற்கான தற்போதைய முயற்சி யாதெனில், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சியத் திணைக்களத்திற்கென (DFID) INTRAC இனால் அது இப்போது விருத்தி செய்யப்படுவதாகும். PCIA க்களை விருத்திசெய்வதில் இற்றைவரை எடுக்கப்பட்ட முயற்சிகளில் எதுவுமே அவற்றை உதவிவழங்குநர் கொள்கையுடன் ஒருங்கிணைக்கப்படக்கூடிய கட்டுக்கோப்புகள் மற்றும் கருவிகள் என்ற முறையில், மாற்றியமைப்பதில் பெரிய அளவில் வெற்றியடையவில்லை என்பதை அவதானித்த INTRAC செய்திட்டமானது, மேலும் முறைசார்ந்த வகையிலே மோதுகையைத் தணித்து, சமாதானத்தை மேம்படுத்துவதற்குக் கொள்கை வகுப்பவர்களுக்கும், நடைமுறைப்படுத்துநருக்கும் உதவக்கூடிய செம்மையான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவக் கருவியொன்றை விருத்தி செய்ய முற்படுகின்றது (INTRAC 1999, 6). முன்னைய DFID ஆய்வறிக்கையொன்றிலிருந்து (Warner 1999) கருத்துகளைப் பெற்று, ஒட்டுமொத்தமான மோதுகை மதிப்பீட்டு முறையியல் ஒன்றின் மூன்று கூறுகளை அது இனங்காண்கிறது. அவையாவன உத்திசார் மோதுகை மதிப்பீடு, (SCA), மோதுகைத் தாக்க மதிப்பீடு(CIA), மற்றும் சமாதான கட்டியெழுப்பலுக்கான கட்டுக்கோப்பு.

முதற்கூறாகிய உத்திசார் மோதுகை மதிப்பீடானது மோதுகைச் சூழலின் ஒரு பகுப்பாய்வை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. அது ஒரு பிரதேச மட்டத்தில் அல்லது நாட்டு மட்டத்தில் நடத்தப்பெறும். புஷ்ஷினுடைய செய்திட்டத்துக்கு முந்திய மதிப்பீட்டுக்கொத்ததாகவும், வரிசைப்பட எடுத்துரைக்கின்ற பகுப்பாய்வு ஒப்பீட்டு அடிப்படைக்கான OECD/DAC இன் ஆலோசனைக் கொத்ததாகவும் இருக்கும் இந்த உத்திசார் மோதுகை இயக்கவியலின் சூழமைவுப் பகுப்பாய்வு, அத்தகைய ஒரு சூழ்நிலையில் அபிவிருத்தி மற்றும் மனித நேய நிகழ்ச்சித் திட்டங்களைப் பின் தொடர்ந்து செல்லலுடன் தொடர்புடைய இடர்களின் மதிப்பீடு மற்றும் சமாதான உருவாக்கத்தின் சந்தர்ப்பங்களின் மதிப்பீடு என்பவற்றை வழங்குகின்றது.

இரண்டாவது கூறாகிய மோதுகைத் தாக்க மதிப்பீட்டானது நுணுகி ஆராய்தல், தரத்தை மதிப்பிடல், கண்காணித்தல் மற்றும் செய்திட்டங்களின் மதிப்பீடு என்பவற்றில் விடயக் கருமபீட அலுவலர்களுக்கொரு கருவியாக இருப்பதற்கெனத் திட்டமிடப்பட்டதாகும். இந்த இரண்டாவது வலுப்படிநிலை குறிப்பாகச் செய்திட்ட மட்டத்தின்மீது கவனத்தை ஒருமுகப்படுத்துவதுடன், மோதுகை தொடர்பான இடர்களைத் தனிப்பதற்கும், சமாதான உருவாக்கச் சந்தர்ப்பங்களுக்கு ஆதரவளிப்பதற்குமான அவர்களது திறமையை மேலும் நன்கு மதிப்பீடு செய்வதற்குமான ஒரு அடிப்படையையும் ஏற்படுத்துகின்றது. செய்திட்டங்களின் மோதுகைக் காப்புத்தன்மை (செய்திட்டம் மீதான மோதுகையின் தாக்கத்தை இயன்றவரை குறைக்கும் தன்மை), குறைந்த பட்சத் தீங்கு (மோதுகை மீதான செய்திட்டத்தின் தாக்கம்) மற்றும் அதிகபட்ச நன்மைகள் (மோதுகைத் தடுப்புக்கும், சமாதான உருவாக்கத்திற்குமான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்) என்பவற்றையும் அத்தகைய ஒரு கருவி இயலுமானதாக்குகிறது. இவ்வாறாக, SCA இல் உருவாக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் மதிப்பீட்டாளர்கள் ஆரம்பச் செய்திட்ட மதிப்பீட்டை நிறைவேறுற்றக்கூடிய நிலை இருந்தது. அத்துடன் இடர்கள் அல்லது வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படின், மேலும் அதிக விபரங்களை உள்ளடக்கிய CIA ஐப் பிரயோகிக்கக் கூடியதாகவிருந்தது.

மூன்றாவது கூறு, சமாதான உருவாக்கற் கட்டுக்கோப்பாகும்.. சமாதான உருவாக்கல் மீது தெளிவான அர்ப்பணிப்புடன் கூடிய குவிமையத்தைக் கொண்ட செய்திட்டங்களை மதிப்பீடு செய்யவும், கண்காணிக்கவும், கருத்துரைக்கவும் இது பயன்படுத்தப்படும். இது விரிவான CIA செய்திட்டத்தின்மீது கட்டப்படுவதுடன், தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய சுட்டிகளை விருத்திசெய்வதற்கான

அடிப்படையாகப் பங்கதாரர்களின் புலனுணர்வு இருப்பது குறித்தும் ஆராய்கிறது. இரண்டாம், மூன்றாம் அடுக்குகளுக்கிடையேயான வேறுபாடு யாதெனில், முன்கூறப்பட்டவை இடர் தணிப்பின்மீது கவனம் செலுத்துகையில், பின்வருபவை வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தலின் மீது கவனம் செலுத்துகின்றது.

மூன்று வெவ்வேறு முறையியல்களையும் பயன்படுத்தக்கூடிய திட்டவட்டமான உள்ளடக்கம், வகையினங்கள் அல்லது சுட்டிகள் என்பவற்றை முன்கூட்டியே நிர்ணயிப்பதற்கு முயற்சிப்பதை விட்டுவிட்டு, INTRAC செய்திட்டத்தில், நான்கு முன்னோடி ஆய்வுகளில் ஈடுபடும் விசேட நிபுணத்துவ ஆலோசனையாளர்களால் பொறுப்பேற்கப்பட்டதுபோன்று தனது பணியின்போது இவற்றை விருத்தி செய்யவே நாட்டம் கொண்ட பொதுவான சட்டகங்களுக்கு மாறானவகையில், திட்டவட்டமாகக் காணப்படும் சூழமைவு பற்றிய விடயத்தை மேலும் சிறந்த முறையில் ஆராயும் பொருட்டு, நான்கு மோதுகை நிலைமைகள் பகுப்பாய்வுக்கெனத் தெரிவு செய்யப்பட்டன. சோவியத் தேக்கநிலைக்குப் பிந்தியநிலை/ இடைமாற்றம், கட்டுப்பாடற்ற தீவிர நிலைப்படும் மோதுகை, தீவிரப்படுவதும் ஆனால் இன்னும் விரிவாகப் பரவாத கட்டுப்பாடற்ற மோதுகை மற்றும் வெளியே தெரியாத அல்லது தீவிரமடைவதற்கு முந்திய மோதுகை என்பனவே அந்த நான்கும் ஆகும்.

இற்றைவரையில், நான்கு விடய ஆய்வுகளில் மூன்று மட்டுமே பூர்த்தியாகியுள்ள நிலையில் ஏதேனும் உள்நோக்குகள் மற்றும் முடிவுகள் என்பன ஆரம்பநிலையானவையென்றே இன்னும் கருதப்படவேண்டும். இருந்தும், இதுவரை வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் சில ஆர்வத்தைத் தூண்டும் அம்சங்களை நிச்சயம் சுட்டிக் காட்ட முடியும்.

இவற்றுள் முதலாவது யாதெனில், இக்கணிப்பீடுகளின் மிக முக்கிய பங்களிப்பு SCA இன் வடிவத்திலேயே வரக்கூடும் என்று உணர்தலாகும். இது அரசியலின் இயக்கவியல்குறித்து உதவி வழங்கும் நாடுகளின் கொள்கையைக் கூருணர்வுடையதாக்கும் என்பதுடன், தொடர்ந்து இடம்பெறுகின்ற அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றமையால், அதற்கேற்றாற்போல் நிகழ்ச்சித்திட்டமிடல் சீர்செய்யப்படுவதையும் அனுமதிக்கும்.



இரண்டாவதாக, மோதுகை நிலைமையொன்றின் வெவ்வேறு துறைகளுக்குள்ளே காணப்படும் இயக்கவியலைச் சரியான விதத்தில் இனங்கண்டு பகுப்பாய்வு செய்வதற்கு இயலுமானதாக இருப்பது நிச்சயம் முக்கியமானதாக இருக்கும் அதேவேளை, அவற்றுக்கிடையேயான இடைத்தாக்க விளைவையும் பகுப்பாய்வு செய்வது அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மோல்டோவா குறித்த தனது அறிக்கையில் வூட்வர்ட் குறிப்பிடுவதுபோல் வெவ்வேறு துறைசார் பரப்புகளின் இடைத்தாக்க விளைவுகளே பகுப்பாய்வு செய்வதற்கு மிகக் கடினமானவை. ஆனால், மோதுகைத்தாக்க கணிப்பீட்டு முறையியலால் செய்யக்கூடிய ஆகப்பெரிய பங்களிப்பும் அதுவே (வூட்வர்ட் 2000, 25). இதனோடு தொடர்புடையது வெவ்வேறு தலையீடுகளின் திரள்தாக்கங் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டிய தேவையாகும்.

மூன்றாவதாக, உதவிபுரிகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வலுவூட்டுகின்ற பின்வருபவை தொடர்பான பல்வேறு எடுகோள்களைத் தெளிவுபடுத்துகின்ற தேவையை SCA கொண்டுள்ளது. மோதுகை மற்றும் மோதுகைத் தீர்வு என்பவற்றை நோக்கியதாக என்ன அணுகுமுறையை அது கொண்டுள்ளது, என்ன விளைவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன? மேலே அவதானித்தவாறு, இது கொள்கைவிரிவான கணிப்பீடுகளுக்கான OECD/DAC யோசனைகளால் நிறைந்து விளங்குவதுடன், அடிப்படை எடுகோள்கள், உண்மையான நிகழ்ச்சித் திட்டமிடல், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் மற்றும் உண்மையான விளைவுகள் என்பவற்றுக்கிடையேயான சாத்திய மோதுகைநிலைகளை பயனுறுதியுடன் பகிரங்கப்படுத்துகின்றன.

நான்காவது விடயம், சூழமைவின் முக்கியத்துவமாகும். உலகப் பொதுக்கருவிகள் பிரயோகிக்க இலகுவானதாயிருக்கக்கூடும், ஆனால் குறிப்பிட்ட ஒரு நிலைமையின் சிக்கல்தன்மையை வெற்றிகொள்ள ஏறத்தாழ நிச்சயமாக அவை தவறிவிடுவதால், மட்டுப்படுத்தப்பட்ட செல்லுபடித்தன்மையை மட்டும் அவை கொண்டிருக்கும். குட்ஹான்ட் கூறுவதுபோல், மிகவும் பொதுப்படையானதாகக் காணப்படும் தயார் நிலை நியம கருவிகளுக்கும், மிகவும் திட்டவட்டமானதாகவும் ஒப்பிடுதலைக் கடினமாக்குவதாகவும் உள்ள தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட கருவிகளுக்குமிடையே சரியான ஒரு சமநிலையைக் காண்பதே இப்போதுள்ள சவால் ஆகும் (Good hand 2000,9).

ஐந்தாவது, மோதுகைத் தாக்க கணிப்பீடுகள் எப்போதும், மதிப்பீட்டுக்குழு, உள்ளூர் பங்குதாரர்கள், செயற்படுத்தும் முகவர் நிலையங்கள் மற்றும் உதவி வழங்குநர்கள் என்போருக்கிடையேயான ஓர் உரையாடலின் விளைவுப் பொருளாகவே இருக்கவேண்டும். பயனுறுதிகொண்ட மதிப்பீடுகள் செயன்முறையை நோக்கித் திசை முகப்படுத்தப்பட்ட ஒரு கற்றல் அணுகுமுறையை மேற்கொள்ளவேண்டும். அத்தகைய பங்கேற்புடனான முறையியல்கள் மூலமாக மட்டுமே நியம மதிப்பீட்டு மற்றும் கணிப்பீட்டு முறையியல்களின் விதிமுறைசார் வாதத்தைக் கணிப்பீட்டாளர்கள் வெற்றிகொள்ளமுடியும்.

ஆறாவது விடயம் யாதெனில், திட்டவட்டமான தாக்கங்களைக் கணிப்பீடு செய்வதன் சாத்தியம் குறித்து எச்சரிக்கையாயிருத்தலாகும். பொதுவான போக்கு மற்றும் மாற்றத்தின் ஒட்டுமொத்தமான கோலம் என்பவற்றை இனங்கண்டவாறு PCIA க்கள் நிகழ்தகவுகளை மிகத்திறமையாகக் கையாள்கின்றன.

இருப்பினும் INTRAC அணுகுமுறைக்கு வரையறைகள் உள்ளன என்பதும் தெளிவான ஒன்றே. முதலில், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செய்திட்டங்களின் கணிப்பீட்டுக்காக இதுவரை ஒரு கொள்கைக் கருவியையோ அல்லது ஒரு தொகுதி அளவுகோல்களையோ இனங்காணவோ, அல்லது தெளிவற்ற எடுத்துரைப்பை செய்யவோ அதனால் இயலாதுபோயிற்று. புஷ்ஷின் மாதிரியம் போன்று, கேட்கத் தகுந்த சிலவகைக் வினாக்கள் அல்லது ஆராயப்படவேண்டிய சில விடயங்கள் என்பனகுறித்து ஆலோசனை தெரிவிப்பதற்கு மட்டுமே அதன் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் புஷ் வழங்குவதிலும் பார்க்கக் குறைந்த விளக்கத்துடன் இக்குறைபாடானது, முறையியலின் நிறுவனரீதியான அறிவைப் பெறுவதற்குக் குறிப்பிடத்தக்க வகையில் தடையாக இருக்கக் கூடும். அத்துடன் இதுபற்றிய முடிவு வெளியில் உள்ள நிபுணத்துவ ஆலோசனை வழங்குநர்களின் குழுவொன்றின் கைகளில் விடப்படுகிறது.

இரண்டாவது, பகுப்பாய்வின் உத்திசார்மட்டத்தின்மீதான அழுத்தமானது துரதிருஷ்டவசமாக, ஆரம்ப முறையியலின் இரண்டாவது இரு வலுப்படிகளை வளர்ச்சி குன்றிய நிலையில் விட்டுவிட்டது. உண்மையில் செய்திட்டமானது முன்னேற்றங் கண்டுள்ளமையால், சமாதான உருவாக்கக் கட்டுக்கோப்பைப் பின்தொடர்ந்து செல்லும் முயற்சிகள் அநேகமாகக் கைவிடப்பட்டுள்ளன. உத்திசார் மட்டப்பகுப்பாய்வின்மீது ஏறக்குறைய முழுமையாகத் தங்கியிருப்பதில் பல ஆபத்துக்கள் சேர்ந்திருக்கின்றன.

விரிவகல்வான மட்டத்தில், வழங்குநர் தரப்பில் மோதுகை குறித்துக் கருத்தாயிருத்தலைவிட வேறெதையும் உண்டுபண்ணமுடியாத நிலையில் அது PCIA ஐ விட்டுவிடலாம். கொடை வழங்குநர் அநேகரிடையே, மோசமான அளவுக்கு மோதுகைகுறித்த விழிப்புணர்வு இல்லாதிருக்கும் நிலையில், புறக்கணிக்கக்கூடிய ஒரு விளைவாக அது இருக்காது, ஆனால் PCIA முறையியல்களின் உள்ளார்ந்த ஆற்றலைத் தேவையற்ற விதத்தில் அது மட்டுப்படுத்துகின்றது. செய்திட்ட மட்டத்தில், உத்திசார் மதிப்பீடுகளில் தங்கியிருத்தல் தனிச்சேய்திட்டங்களின் தனி நபர்களுக்காக எழுந்த கணிப்புக்களாக மிக இலகுவாகத் தரங்குன்றலாம் அல்லது ஆகக் குறைந்த பட்சம், சமாதான உருவாக்கச் செய்திட்டங்களால்

இலகுவாகத் தங்கி நிற்க முடியாத, விரிவகல்வான, சமூக, பொருளாதார அல்லது அரசியல் இயக்கவியல் மீதான தாக்கங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகளை அதிகரிக்கலாம். உத்திசார் கணிப்பீடுகள் மீது மிகையாகத் தங்கியிருத்தல் (நம்பிக்கை கொண்டிருத்தல்) புதியவகையான, சிறு அளவிலான சமாதான உருவாக்கச் செய்ட்டங்களுக்குக் கிடைக்கும் ஆதரவைக் கிடைக்கவிடாது தடுக்கலாம்.

மூன்றாவது, மிகை சூழமைவுப்படுத்துகையில் ஆபத்தொன்றும் அங்குள்ளது. சூழமைவின் முக்கியத்துவம் குறித்து, புஷ் மற்றும் ஏனையோருடன் சேர்ந்து INTRAC செய்திட்டமும் வலியுறுத்துவது நிச்சயம் சரியே எனக் கூறும் அதேவேளையில், அது PCIA முறையியல்களால் விடை காணப்பட வேண்டிய மேலுமொரு தொகுதி முக்கிய வினாக்களை வெறுமனே முக்கியப்படுத்திக் காட்டுவதற்கே பயன்படுகின்றது. அவ் வினாக்கள் யாதெனில், வெவ்வேறு சூழமைவுகள் வெவ்வேறு விதமான விளைவுகளை உண்டுபண்ணுவது குறித்து என்ன சொல்வது? எது செயலுறுகின்றது (அல்லது செயலுறவில்லை)? எங்கே? ஏன்? பல்வேறு சம்பவங்களுக்கூடாகப் பொதுமையான கருத்துக்களை விருத்தி செய்வதன் சாத்தியங்கள் இங்குதான் மிகப் பயன்விளைவுடையதாகவும், ஐயந் தெளிவிப்பதாகவும் அமையலாம்.

இறுதியாக, உத்திசார் மட்டத்தின் மீது தனது அழுத்தத்தை பிரயோகிக்கும் INTRAC அணுகுமுறையானது செயற்படுத்தும் முகவர் நிலையங்கள் மற்றும் அ.சா.நிறுவனங்கள் அல்லது பங்குதாரர்கள் என்போரின் தேவைகளை விடுத்து, உதவி வழங்குநரின் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யும் ஒரு கருவியாக மாறும் வண்ணம் உதவிவழங்குநரின் மேலாண்மைக்குட்பட்டதாக மாறும் உள்ளார்ந்த இக்கட்டு நிலையுமுள்ளது.



## 5. PCIA : ஒரு சமாதான செயற்பாட்டாளரின் புலப்பார்வை

கணிப்பீட்டு முறையியல் மற்றும் அளவுகோல்களை விருத்திசெய்வதில் மிகவும் ஆர்வத்தைத் தூண்டவல்ல மற்றும் புதுமை பொதிந்த முயற்சிகளில் ஒன்றாக விளங்குவது ஜே றொத்மன் மற்றும் மார்க் றொஸ் என்போரின் நெறியாள்கையின் கீழான செயல் ஆராய்வு முன்முயற்சிச் (ARIA) செய்திட்டமாகும். (Ross & Rothman 1999) இச்செய்திட்டம்பற்றிக் குறிப்பிடக்கூடிய மிக ஆர்வத்தைத் தூண்டும் விடயம் யாதெனில், சிறிய அளவிலான மோதுகைத்தீர்வு மற்றும் சமாதான உருவாக்க முன்முயற்சிகள் மீதான அதன் கவனம் ஒருமுகப்பட்டிருப்பதாகும். இது ARIA வை மற்றைய அநேக PCIA முயற்சிகளிலிருந்து மிகக் குறிப்பிடத் தக்க வகையில் வேறுபடுத்திக்காட்டுகிறது. ஏனெனில், PCIA க்கள் வழமையாக, அபிவிருத்தி அல்லது மனிதநேய நிகழ்ச்சித்திட்டங்களின் மோதுகை மற்றும் சமாதானத்தாக்கங்கள் என்பவைமீது கவனஞ்செலுத்தவே விளைவதுடன், செயற்பாட்டாளரின் கண்ணோட்டத்தைவிட உதவி வழங்குநரின் அம்சம் யாதெனில் செயற்கணிப்பீட்டு முறையியலை அது தெட்டத்தெளிவாகப் பயன்படுத்துவதாகும்.

"மோதுகைத்தீர்வுச் செயற்பாடுகளின் கணிப்பீட்டுக்கான சூழமைவின்படி பொருத்தமான வழிவகைகளை" விருத்தி செய்வதே ARIA செய்திட்டத்தின் நோக்கமாகும் (Rothman 1998, 119). மோதுகைத் தீர்வின் நியம விழுமியங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றுடன் இணக்கப்பாடுடையதும், அவற்றின் ஆக்கக்கூறாகவும் கூட இருக்கின்ற புதிய முறையியல்களை இந்த அணுகுமுறைகள் தேவைப்படுத்துகின்றனவென்று றொத்மன் வாதிடுகிறார். மோதுகைத் தீர்வின் நடைமுறைகள்மீது வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஒன்றாகக் கணிப்பீட்டுச் செயல்முறைகள் இனிமேலும் நோக்கப்படாதவாறு, கணிப்பீட்டுச் செயல்முறைகளுக்கும் மோதுகைத் தீர்வின் நடைமுறைகளுக்குமிடையே இடைவெளியற்ற இணைப்பொன்றை இச்செய்திட்டம் ஏற்படுத்த முனைகின்றது. அவ்வாறில்லாமல், மூன்றாந்தரப்புகள் தெளிவுபடுத்த அவற்றுக்கு உதவும் வகையில், எந்த ஒரு இடையீட்டினதும் இணைந்த ஒரு கூறாக அது மாறுகிறது (Ross & Rothman 1999). கணிப்பீடானது ஒரு சுமையாகவோ அல்லது ஒரு திணிப்பாகவோ

இராமல் புதிது புனைதல் மற்றும் உருவாக்குதிறன் என்பவற்றுக்கான ஒரு மூலவளமாக நோக்கப்படல் வேண்டும் (Ross & Rothman 1999).

கணிப்பீட்டு முறைமை தொடர்பாக தற்போது நிலவும் அதன் அடைவு இலக்குகள் அணுகுமுறைகள் தொடர்புபற்றிய தெளிவின்மைகள் காரணமாகவும் இந்தச் செய்திட்டங்களை கணிப்பீடு செய்வது பற்றிய தெளிவின்மை காரணமாகவும் வளர்ந்து வரும் விரக்தியுணர்வே ARIA செய்திட்டத்துக்கான உந்துதலாக அமைந்தது. செய்திட்டத்தின் குறிக்கோள்கள் பெரும்பாலும் தெளிவற்றனவாகவும், (சமாதானத்தை முன்னெடுத்தல் போன்ற) மிகப் பிரமாண்டமான சொற் பிரயோகங்களுடனும் உருவாக்கப்பட்டதால், கணிப்பீட்டைப் பொறுத்தவரையில் இவை அந்த சொற்பிரயோகங்களை அர்த்தமற்றதாக ஆக்கின. மேலும் செய்திட்டங்கள், செய்திட்டக் குறிக்கோளைத் தெளிவுடன் நோக்கியதாக அமையாத நடவடிக்கைகளைப் பின்தொடர்வதில் முடிவுறுவதுடன், என்ன வகையான மோதுகைத்தீர்வு நடவடிக்கைகளும், செய்திட்டங்களும் வெற்றிகரமாக அமையும், என்னென்ன நிலைமைகளின் கீழ் அவை வெற்றிகரமாக அமையும் என்பதை உணர்ந்து கொள்ளும் எந்த ஒரு முயற்சியையும் குழப்பியடிப்பதாகவும் அமைகின்றன. றொத்மனின் வாதம் என்னவெனில், இடையீட்டாளர்களும், பங்குதாரர்களும் மோதுகைத் தீர்வுக்கான நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடத் தூண்டும் தமது குறிக்கோள்களை எவ்வளவுக்குச் சிறப்பான வகையில் தனியாகவும், இடைத்தாக்க முறையிலும் தெளிவாக எடுத்துரைக்கின்றனரோ அந்த அளவுக்கு உடனடியாக வெற்றியை வரையறை செய்து உணர்ந்து கொள்வார்கள்.

(ஆரியா) ARIA செயல்முறை மூன்றுகட்டங்களைக் கொண்டது: தளக்கோட்டை ஏற்படுத்தல், இடையீடுகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துதல், மற்றும் பரிமாண மாறுதல்களுக்குட்பட்ட அளவுகோல்களைத் தெளிவாக முன்வைத்தல். இவை ஒன்றோடொன்று தொடர்பற்றவையோ அல்லது ஒன்றுக்குப்பின் ஒன்றாக ஏற்படுபவையோ அல்ல, ஆனால் செய்திட்டக்காலம் முழுவதும் இவை ஒன்றின் மீதொன்று செயலாற்றுபவையாகவும், மீண்டும் மீண்டும் ஏற்படுபவையாகவும் மற்றும் தொடர்ந்து நிகழ்பவையாகவும் உள்ளன. தளக்கோட்டை நிறுவுதல் என்னும் முதல் அடுக்கு பின்வரும் விடயங்களை ஆராய்கின்றது.

- செய்திட்டக்குறிக்கோள்கள் யாவை?
- அவை யாருக்கு தேவைப்படுகின்றன? ஏன்?
- அவை எவ்வாறு ஈட்டப்படும்?

இதற்கான நோக்கம் யாதெனில், அடைவு இலக்கினை தெளிவாக எடுத்துரைக்கும் செயல்முறைகளில் இயன்றவரை தெளிவாக இருக்கச்செய்தலாகும். ஏதாவதொரு குறித்த இடையீடுபற்றி அறிவிக்கின்ற அடைவு இலக்குகள் மற்றும் நோக்குகள் என்பனவற்றின் பல்வேறுபட்ட வீச்சினை இது தெரியவைக்கும். இவ் விடயத்தை நடைமுறைப்படுத்தும் முகாமை நிறுவனத்துடனும் இந்த செய்திட்டத்துடன் பாத்தியதை கொண்டோருடனும் பயன்பெறுநருடன் ஒப்பிடும் போது கொடைவழங்குனர் எத்தகைய தூண்டுதல்களையும் எத்தகைய நிகழ்ச்சி நிரலையும் கொண்டுள்ளனர் என்பதை தெளிவுபடுத்த இந்த வினா உதவுகிறது.

இடையிடுகைக்கான வழிகாணலை எவ்வாறு செய்வது எனும் ARIA செய்திட்டத்தின் இரண்டாவது அடுக்கு விடயமானது பாத்தியதை உடைய எல்லோருக்கும் பொதுவான ஈட்டங்களை எடுத்துக்காட்டும். அதுவே அதன் சிறப்பியல்பாகும். ஒன்றிணைதல், வேறுபாடுகள் மற்றும் பதற்றங்கள் என்பன தொடர்பான அம்சங்கள் வெவ்வேறு செய்திட்டப் பாத்தியதை கொண்டோர்களால் பற்றிக்கொள்ளப்படவும், தெளிவாக உரைக்கப்படவும், முழுமையாகத் தொடர்பாடல் செய்யப்படவும் மற்றும் புரிந்து கொள்ளப்படவும் இது வழியேற்படுத்துகின்றது. இதன் நோக்கம் செய்திட்டத்தின் குறிக்கோள்களைப் பொறுத்தமட்டில்

பங்கேற்பாளர்களை இது பற்றி சிந்திக்க வைப்பதும், முழுமையான விழிப்புணர்வும் கொண்டவர்களாக மாற்றுவதும், காலப்போக்கில் நோக்கங்களில் ஏற்படும் எந்த மாற்றங்களையும் இனங்கண்டு ஆய்வுக்காக அவற்றை தெளிவாக சித்திரித்து பதிவு செய்யும் வகையில் நோக்கங்களுக்கான தளக்கோடொன்றை வழங்குவதுமே இதற்கான நோக்கமாகும்.

பரிமாண மாறுதல்களுக்குட்பட்ட அளவுகோல்களைத் தெளிவாக முன்வைத்தல் என்னும் மூன்றாவது அடுக்கானது வெற்றிக்கான சூழமைவு மயப்படுத்தப்பட்ட அளவு கோல்களை உருவாக்குவதற்கென வடிவமைக்கப்பட்ட ஒரு தேடல் மற்றும் கண்காணிப்புச் செயல்முறையாகும். செய்திட்டம் செயற்பட ஆரம்பிக்கையில் அதில் மாற்றங்களை ஏற்படுத்துமுகமாக இவை உள்ளகரீதியில் பிரயோகிக்கப்படலாம் அல்லது அடைவு இலக்குகள் பொருத்தமுடையனவாய் உள்ளனவா, அத்துடன் அவை எய்தப்படுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யுமுகமாக அவை வெளிவாரி ரீதியாகப் பிரயோகிக்கப்படலாம். றொஸ் மற்றும் ரொத்மனைப் பொறுத்தவரையில், எந்தச் சூழமைவில் செய்திட்டம் இடம்பெறுகின்றதோ அந்தச் சூழமைவின் மாறுகின்ற இயக்கவியலுக்கு நெகிழ்வுப் போக்குள்ள பதிற்செயற்பாடுகளுடன் காலத்திற்கேற்றவாறு பொருந்தி, பரிணாம மாறுதலடையும் செய்திட்டங்களே மிக வெற்றிகரமானவை எனக் கொள்ளப்படுகின்றன. ஆயினும் இம்மாற்றங்கள் முறைமைசார்ந்த மற்றும் தெளிவான ஒரு பாணியிலே நிகழ்வதும், முற்றிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான ஒரு அணுகுமுறையை இடையீட்டுக்காக நாடும் எந்த ஒரு எண்ணத்தையும் மனதிலிருந்து அகற்றிவிடுவதும் அவசியமாகும்.

பாங்ஸ் மற்றும் மிச்செல் ஆகியோரின் (1997) நூலிலிருந்து ARIA கருத்திட்டமானது, தாக்கத்தை அல்லது மாற்றத்தை கணிப்பீடு செய்யக்கூடிய மூன்று விடயப் பரப்புகளை இனங்காண்கிறது. அவையாவன,



- செயலமர்வின் பங்கேற்பாளர்களிலேயே நிகழ்வது,
- செயலமர்வின் நேரடி விளைவாக ஏற்படுவது மற்றும்
- ஈடுபாடுகொண்ட தரப்பினரின் நடத்தை மற்றும் உறவுகளில் அவதானிக்கக் கூடியவையாயிருப்பதுமாகும்.

இம்மூன்றும் உள்ளக அளவுகோல்கள் மற்றும் வெளிவாரி அளவுகோல்கள் என்பவற்றுக்கிடையேயான மேலுமொரு வேறுபாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. செய்திட்டத்திலீடுபடுகின்ற மக்கள் அல்லது குழுக்கள்மீது செய்திட்டம் ஏற்படுத்துகின்ற நேரடித் தாக்கத்தோடு உள்ளக அளவுகோல்கள் தொடர்புறுகின்றன. வெளிவாரி அளவுகோல்கள் தெளிவான, நேரடியான இவ்விளைவுகளை அகல்விரிவான மோதுகை இயக்கவியலுடன் இணைக்கின்றன. மோதுகைத்தீர்வுகுறித்த எந்த ஒரு தனியான முன்முயற்சியும் (பண்பினில் இவை பெரும்பாலும் சிறிய அளவிலானவை மட்டுமே) மோதுகையொன்றைத் தன்னளவில் முழுமையாகத் தீர்த்துவைக்கக்கூடியதாயில்லை என்பதில் றொத்மன் மற்றும், றொஸ் என்போர் உடன்படுகின்றனர். ஆயினும் ஏனைய முன்முயற்சிகளுடன் இணைந்து, எந்த ஒரு செய்திட்டமும், தன்னளவில் கொண்டுள்ள தாக்கத்துக்காகவோ அல்லது படிப்படியாக அதிகரித்து வளர்கிற அடிப்படையிலோ ஆராயப்பட முடியும் என அவர்கள் வாதிடுகின்றனர்.

PCIA க்களை உருவாக்குவதில் பெரும்பாலும் சிக்கல் காணப்படுகிறது. கணிப்பீடுகளுக்கான பொருத்தமான அளவுகோல்களை அல்லது நியமங்களைத் தேடிக் காண்பதே அச்சிக்கல் ஆகும். றொஸ் மற்றும் றொத்மன் என்போர் சுட்டிக்காட்டுவதுபோல், ARIA செயலாற்றிவந்த எந்த ஒரு செய்திட்டமும் “செய்திட்டமொன்றின் வெற்றியைக் கணிப்பீடுசெய்தற்கான தெளிவான நியமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன” என்று கூறுமளவுக்கு இன்னும் முன்னேற்றமடையவில்லை (Ross & Rothman 1999). இருந்தாலும், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலகுபடுத்தும் செயலமர்வுகளால்

உதாரணப்படுத்தப்பட்ட, குறிப்பிட்ட வகைகளைச் சார்ந்த இடையீடுகளின் குறிப்பிட்ட பண்புடன் இணைந்த, சாத்தியமான அளவுகோல்களின் தன்மையைப் புரிந்து கொள்வது என்பது கடினமாக இருக்காது (பெட்டி 3 ஐக் காண்க).

**பெட்டி 3 : பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலகுபடுத்தும் செயலமர்வுகளுக்கான சாத்தியமான கணிப்பீட்டு அளவுகோல்கள்**

செயலமர்வானது எந்த அளவுக்கு :

1. ஊடாட்ட மோதுகைப் பகுப்பாய்வை ஆதரிக்கிறது,
2. தரப்பினர்க்கிடையேயான உறவுகளை ஆதரிக்கிறது,
3. தரப்பினர்க்கிடையேயான திருந்திய தொடர்பாடலை ஊக்குவிக்கிறது,
4. கல்விசார் வகிபாகமொன்றை வகிக்கின்றது. கருத்துக்கள், எண்ணக்கருக்கள், முறைவழிகள் என்பவற்றின் இடைமாற்றம்,
5. பேச்சுவார்த்தைக்கு முந்திய வகிபாகத்தை வகிக்கிறது,
6. சமரசத்துக்கான விருப்பார்வத்தை மேம்படுத்துகின்றது,
7. பேச்சுவார்த்தைச் செயல் முறைக்குத் துணைபுரிகின்றது,
8. பேச்சுவார்த்தை மூலமான உடன்பாடுகளைச் செயற்படுத்தத் துணைபுரிகின்றது

(ஆதாரம் ஹொஃவ்மன் 1995, 16-17)



ஆயினும், புஷ் மற்றும் INTRAC என்போரால் உருவாக்கப்பட்ட முறையியல்களில் இருப்பது போன்று, வகைநிலைக்குரிய அல்லது விதிமுறையாக எடுத்துக்கூறப்படும் அளவுகோல்களை வரவழைப்பது குறித்து ARIA செய்திட்டமும் எச்சரிக்கையுடையதாக உள்ளது. அதற்குப் பதிலாக, இவைகள் இடையீட்டுக்கெனக் குறித்துரைக்கப்பட்டதாக இருப்பதுடன், செய்திட்டத்தில் பங்கேற்போரிடமிருந்து சிறந்த முறையில் தெளிவைப் பெறுவதாகவும், அவர்களோடு இணைந்து இத்துலக்கத்தைப் பெறுவதாகவும் இருக்கவேண்டிய தேவையுள்ளது என அது வாதிடுகிறது. அவ்வாறான அணுகுமுறையொன்று மேலும் விபரமான, நுண்ணிய வேறுபாடுகளைக்கொண்ட யதார்த்த பூர்வமான அளவுகோல்களை உருவாக்குவதுடன், செய்திட்டமொன்றில் ஈடுபடும் அனைவரிடமிருந்தும் ஈடுபாட்டுக்கான கடப்பாட்டையும் உருவாக்கும் என அவர்கள் வாதம் செய்கின்றனர்.

இடம்பெறும் இடையீட்டின் தன்மையைப் பொறுத்து அளவுகோல்கள் சீர்செய்யப்படவும் வேண்டியுள்ளன. பயிற்சிக்கான அல்லது ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான செயலமர்வுகளுக்கான அளவுகோல்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் இலகுபடுத்தப்பட்ட செயலமர்வுகளுக்கான அளவுகோல்களைவிட வேறுபட்டிருக்கும். எனினும், உடனிணைந்து தொழிற்படும் ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் தற்போது நிகழ்த்தப்பெறும் நேர்பு ஆய்வுகள் என்பவற்றிலிருந்து ஒன்றிணைத்த நுண்ணறிவுத்திறன்களுடன் பணிபுரிந்தவாறு றொஸ் மற்றும் றொத்மன் என்போர் சர்வதேச அல்லது இனக்குழும மோதுகைத் தீர்வுக்கான விளக்கமான நியமங்களை இனங்கண்டுள்ளனர் (காண்க: பெட்டி 4).

## பெட்டி 4 : மோதுகைத்தீர்வுச் செய்திட்டங்களுக்கான ARIA வின் விளக்கம்

**நியமங்கள் நீண்டகாலத்தில் ஏற்படும் விளைவுக்கான அடைவு இலக்குகள்**

1. நிறுவனமயப்படுத்தல்: உள்ளூர் ஆற்றல்களை விருத்திசெய்தல், பணி நீடிக்கச் செய்து ஆழமாக்கும் கட்டமைப்புக்களை உருவாக்கல்
2. மீளவருந் தாக்கம்: பரந்த சமுதாயத்தை நோக்கி மீளவும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குறித்த நுண்மட்ட இடையீடுகள் மீது செல்வாக்குச் செலுத்தல்.
3. செய்துகாட்டுதல்: இனக்குழும பதற்றத்தைத் தீர்ப்பதற்கென நம்பத்தகுந்த மற்றும் மீள ஏற்படுத்தவல்ல மாதிரிகளை நிறுவுதல்.

**அத்தகைய நீண்டகாலக் அடைவு இலக்குகளை நிறைவேற்றுவதற்கான முறைகள்**

1. தேவைகளின் கணிப்பீடுகள், பிரச்சினைகளை இனங்காணல்,
2. உரையாடல்: அர்த்தமுள்ள, கிரமமான, நீடித்து நிலைக்கக்கூடிய உரையாடல்
3. நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்: பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வும்
4. வலுவூட்டல்: ஆக்குதிறன் கொண்ட, அமைதி தருகின்ற மாற்றத்தை அடையும் அதிகாரத்திற்கு அங்கீகாரமளித்தல்:
5. பங்கஸதர்களாக இருத்தல்: ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒத்துழைப்பு,
6. ஈடுபடுத்தல்: ஆக்கபூர்வமான மோதுகை முகாமையில் ஈடுபடுவதற்கு பிணக்குப் பட்டோரை சம்பந்தப்படுத்துதல்.
7. உள்ளூர் மயப்படுத்தல்: உள்ளூர் மோதுகை முகாமையின் தலைவர்களை இனங்காணல்,
8. ஊக்குவித்தல்: பிணக்குக்குட்பட்ட தரப்பினரிடையே உருப்படியான உடனிணைகின்ற செய்திட்டத்தை முன்னெடுத்தல்.
9. பயிற்றுவித்தல்: CRஇன் சூழமைவுக்குப் பொருத்தமான எண்ணக்கருக்கள் மற்றும் ஆற்றல்களில் உள்ளூர் தலைவர்களை / தீவிர செயற்பாட்டாளர்களை பயிற்றுவித்தல்
10. மதிப்பீடு: இடையீடுகளை மதிப்பீடு செய்வதற்கான நம்பகமான பயனுள்ள முறைகளை விருத்தி செய்தல்

(ஆதாரம் : றொஸ் மற்றும் றொத்மன் 1999, 251)

நேரடி மோதுகைத் தீர்வு / சமாதான உருவாக்கச் செயற்பரப்பைக் கொண்ட செய்திட்டங்கள் மீதான கவனக் குவிப்பு அதன் புதுமையான முறையியல், மோதுகைக் கோட்பாடுகள் மற்றும் மோதுகைத் தீர்வு என்பனவற்றைக் கொண்ட செய்திட்ட வடிவம், செயற்படுத்துகை மற்றும் மதிப்பீடு என்பவற்றுடன் தெளிவான முறையில் இணைப்பதற்கான அதன் முயற்சி உள்ளிட்ட பல விடயங்களில் ARIA செய்திட்டம் ஆக்கபூர்வமான ஒன்றாகவிருக்கையில், அதன் அணுகுமுறையுடன் உள்ளார்ந்த பிரச்சினைகளும் உள்ளன.

இவற்றுள் முதலாவது மேலே ஆராயப்பட்ட பல்வேறு அணுகுமுறைகளால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைக்கு நேர் எதிரானதாகும். விரிவகல்வான உத்திசார் நிலையிலிருந்து செய்திட்ட மட்டத்துக்குப் பகுப்பாய்வு எவ்வாறு நகரவேண்டும் என்பதற்குப் போதுமான ஒரு விளக்கத்தை வழங்குவதற்கு மாற்றுயோசனைகளான அணுகுமுறைகள் தவறுகையில், ARIA அணுகுமுறையானது எதிர்த்திசையில் உள்ள தொடர்புகுறித்த தெளிவான விளக்கத்தை மேலும் விருத்தி செய்யவேண்டியுள்ளது.

இரண்டாவதாக, அடைவு இலக்கு தெளிவாக எடுத்துரைப்பதற்கான ARIA வின் உள்ளடங்கலான அணுகுமுறை எவ்வளவுதான் பாராட்டுக்குரியதாகவிருந்தபோதிலும், உடன்பாடுகாணப்பட்ட அடைவு இலக்கு ஆகக்குறைந்த பொதுப் பகுப்பெண்ணின் அடைவு இலக்காகவே தொடர்ந்தும் இருக்கும் என்ற ஆபத்தை ARIA செய்திட்டம் கொண்டுள்ளது. இவ்வாறாக இம்மதிப்பீட்டுச் செயல்முறையின் பண்பானது உண்மையில் எந்த உருவாக்குதிறனைப் பேணிவளர்க்கவேண்டும் என விரும்பியதோ அந்த உருவாக்கு திறனுக்கு உலைவைக்கவே பயன்படக்கூடும்.

மூன்றாவதாக, சூழமைவுரீதியான மற்றும் கலாசாரரீதியான உணர்திறன் மீது ARIA அழுத்தத்தைக் கொண்டிருந்தபோதும், பிரச்சினையைத் தீர்க்கும் முறையியல்கள் மற்றும் அடைவு இலக்குகளைத் தெளிவுபட உரைத்தல், பகுத்தறிவுடைமை மற்றும் உரையாடல் என்பவைமீதான அவற்றின் இணைந்த அழுத்தம் என்பனவற்றுக்கு அது கொடுக்கும் முக்கியத்துவத்தின் ஒரு விளைவே உண்மையில் அதன் அணுகுமுறையாகும். பகுத்தறிவுடைமை மற்றும் தொடர்பாடல், சொல்லாடல் என்பவற்றின் பண்பு ஆகியவை தனிநபர் மீதான மேற்கத்திய கருத்துக்களில் ஆழமாய் ஊறிப்போயுள்ளன.

## 6. PCIA : எழுவினாக்கள், பிரச்சினைகள், இக்கட்டுநிலைகள் மற்றும் மேற்செல்லும் பாதைகள்



PCIA முறையியல்களை விருத்தி செய்வதற்காக இவை எவ்வாறு உதவும்? சாத்தியப்பாடுகள் பல உள்ளன.

ஒன்று, PCIA முறையியல்களை விருத்தி செய்வதற்கான தற்போதைய முயற்சிகள் தம்மைத்தாமே மெதுவாக அழித்துக் கொள்கின்றன என்பதை மட்டுமே மேலே ஆராயப்பட்ட அனைத்து அனுபவங்களும் சுட்டிக்காட்டுகின்றன. எடுக்கப்பட்ட முயற்சிகளின் பல்வகைத்தன்மை, அவைகளால் எதிர்கொள்ளப்பட்ட பல்வேறு சிரமங்கள், நிறைவேற்றப்படமுடியாதுபோன வாக்குறுதிகள் என்பனவற்றுக்கும், அன்றிலிருந்து ஆதரவிழந்துபோய்நிற்கும் பல்வேறு மோதுகை நேரகால எச்சரிக்கை முறைமைகளுக்கிருந்த, உயர்ந்த நம்பிக்கைகளுக்கும் நேர்ந்த கதிகளுக்கிடையே அதிசயிக்கத்தக்கவோர் ஒற்றுமை காணப்படுகிறது.

நேரகால எச்சரிக்கைக்கான முயற்சிகளுக்கு நேர்ந்ததைப் போன்றே, PCIA விடயத்திலும் தெளிவாகத் தெரிவது யாதெனில், மோதுகை நிலைமைகளுக்குப் பயனுறு விதத்தில் பதிற் செயற்பாடு புரிந்தாக வேண்டிய சர்வதேச சமூகத்தைச் சார்ந்த எந்தவொரு செயற்பாட்டாளருக்கும் PCIA ஆனது உண்மையில் முக்கியமானதும், பயனுள்ளதுமான ஒரு கருவியாகும் என்பதே. கருத்து நிலை மட்டத்தில் குறைந்தபட்சம் பரந்துபட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அத்தகைய ஓர் அணுகுமுறை எதை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்பது பற்றிய பொதுவான உடன்பாடும் காணப்படலாம். இருந்தபோதிலும், நேரகால எச்சரிக்கைக்கு நிகழ்ந்தது போல், மதிப்புமிக்க இக்குறிக்கோள்களைச் செயற்படுத்திப் பயன்படுத்தக்கூடிய கருவியாக மாற்றும் முயற்சி இதுவரை நிறைவேறவில்லை. கோட்பாட்டுக்கும், நடைமுறைப்படுத்துதலுக்குமிடையேயான இடைவெளி இதுவரை நிரப்பப்படவில்லை, PCIA க்களில் எடுக்கப்பட்டுவந்த பல்வேறு முயற்சிகளும் இதுவரையில், நடைமுறையில் எங்கும் செல்லாத வழியாகவே மாறிப்போயின.

மாறாக, சற்றுக்கூடிய நம்பிக்கையுடன் மேற்குறிப்பிட்டதை வாசித்தால், நடைமுறைப்படுத்தக்கூடிய PCIA அணுகுமுறையொன்றின் விபரங்களைத் தெளிவுபட உரைப்பதற்கான முயற்சிகளில் எல்லை மீறல்கள் மெதுவாக மேற்கொள்ளப்பட்டிருப்பது புலனாகும். இலங்கை சம்பந்தமாக தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் புஷ்ஷின் பணியாயிருக்கட்டும், INTRAC இல் தொடங்கப்பட்டுள்ள நான்கு முன்னோடி ஆய்வுகளாக இருக்கட்டும், அல்லது ARIA செய்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள வளமான பரிசோதனை அனுபவ அறிவுசார்ந்த செய்திட்ட ஆராய்ச்சியின் வீச்சாக இருக்கட்டும், இவையாவும் யதார்த்தபூர்வமான இந்நிலைமைகளுக்கு உருவாகுநிலை அணுகுமுறைகள் உண்மையில் பிரயோகிக்கப்படும் அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான விடய நிகழ்வுகளை முக்கியப்படுத்திக் காட்டுகின்றன. இருப்பினும், உண்மையில் நடைமுறைப்படுத்தக்கூடிய PCIA அணுகுமுறையொன்றை விருத்திசெய்து செம்மைப்படுத்தும் செயல்முறையில், பரிகாரம் காணப்பட வேண்டியுள்ள பிரச்சினைகளின் முழுமையான வீச்சொன்று காணப்படுகிறது. இவற்றுட் பணிப்பாணைகள் பலவற்றால் எழுந்த இடையீடுகளுக்கும், அவற்றுக்கெதிராக, தரம்வாய்ந்த சமாதான உருவாக்கச் செயற்பாட்டாளர்களுக்குமிடையே வேறுபாட்டைக்காண சிறந்த வழிகளைக் கண்டுள்ளன. கணக்கு கூறும் விடயங்களுக்குத் தீர்வு காணல் (யாருக்காக PCIA க்கள்), தாக்கங்களைக் கணிப்பீடு செய்தற்கான முறையான நேரச்சட்டகத்தை ஏற்படுத்தல், மற்றும் யாருக்கு கணக்கு காட்டுவதாக கருத்திட்டங்கள் அமைய வேண்டும் என்பதைத் தீர்மானித்தல் (உதவிவழங்குநர்க்கா? உதவி பெறுநர்க்கா?) என்பவை இவையாகும்.ஆனால், பல மேலதிக பிரச்சினைகள் ஒருவேளை மேலும் முக்கியம் வாய்ந்ததவையாக இருக்கலாம்.

இவற்றுள் முதலாவது சுட்டிகள் பற்றிய பிரச்சினைகள் ஆகும். நெகிழ்ச்சியற்ற ஒரு தொகுதி சுட்டிகளை சரிதிட்பமாக உருவாக்குவதில் தயக்கம் காட்டப்படுவது புரிந்து கொள்ளக்கூடியதும், சரியானதுமாக இருக்கையில் PCIA க்களில் பயன்படுத்துவதற்கான விளக்கமான, குறிப்பாகத் தெரிவிக்கிற சுட்டிகளின் ஏதாவதொரு வகையையாவது விபரிப்பதில் இதுவரையில் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிகளே கிட்டியிருப்பது வருந்தத்தக்கதே. பொருத்தமற்ற மதிப்பீட்டு முறையியல்கள் மற்றும் அளவுகோல்கள் என்பவற்றிலிருந்து விலகிச்செல்லல், தர்க்கவியல் கட்டுக்கோப்பு முறையியல் மற்றும் அதுபோன்ற அணுகுமுறைகள் என்பவற்றின் கட்டுப்பாடுகளைக் கடந்து செல்லல் ஆகியவைதான் விருப்பார்வமென்றால், பயன்படுத்தத்தக்க அளவு கோல்களையும்,சுட்டிகளையும் தெளிவுபட எடுத்துரைப்பதே மாற்று அணுகுமுறைகளுக்காக நம்பவைக்கக் கூடிய நிலையை உருவாக்குவதன் ஒரு பகுதியாகும்.

இவைகள், குறிப்பிட்ட வகையான இடையீடுகளின் பின்னால் உள்ள கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். அத்துடன் நடைமுறை அனுபவங்கள் மற்றும் விடய ஆய்வுகள் என்பவற்றிலிருந்து எடுக்கப்பட்டதாகவும் இருக்கலாம். மந்திரத் துப்பாக்கிக் குண்டுகள் சார்பாக வாதம் செய்வதல்ல இது, ஆனால், விரிவான எதிர்பாரா விளைவைக் கையாளும் பாங்குகள் மற்றும் வகைமைகள் என்பன இனங்காணப்பட வேண்டிய தேவையை ஆலோசனையாக முன்வைப்பதேயாகும். அத்தகைய சுட்டிகளைப் பெயரிட்டுக் கூறத் தவறியமைக்கு எதிரான சூழமைவுகளையும், குறிப்பிட்ட சூழ்நிலைகளின் விசேடத்துவங்களையும காரணங்களாக கூறுவது நன்றல்ல.

PCIA க்களில் இவ்வெற்றிடத்தைக் கையாள்வதற்கு, மனித நேயத்துறையில் SPHERE செய்திட்டத்தையொத்ததான முன்முயற்சியொன்றை மேற்கொள்வது என்பது சாத்தியமான ஒரு முன்னோக்கிய பாதையாகும். முகவர் நிலையங்கள், அ.சா.நிறுவனங்கள், செயற்பாட்டாளர்கள், பாதியத்தை உடையோர்கள் மற்றும் பயன்பெறுநர்கள் போன்ற அணியொன்று இத்தகைய ஓர் ஆவணத்தை உருவாக்குவதில் ஈடுபடுத்தப்பட முடியும்.

இரண்டாவதாக, PCIA க்களைப் பின்பற்றும் செயற்பாட்டாளர்கள் மதிப்பீடுகளின் பின்வரும் வெவ்வேறு வகைகள் மற்றும் மட்டங்கள் என்பவற்றுக்கிடையே முறைப்படி நிலவும் இணைப்புக்கள் மற்றும் இருபுறத் தொடர்புகள் என்பவற்றின் சிக்கலைப் புரிந்துகொள்ளும் அதிக திறனுடைய ஓருணர்வை

விருத்திசெய்துகொள்ளவேண்டும். விரிவகல்வான கொள்கை மட்டத்திலிருப்பவைகள், உபாய முக்கியத்துவ மட்டத்திலிருப்பவைகள் மற்றும் செய்திட்ட மட்டத்தில் இருப்பவைகள் மேற்சொன்ன அணுகுமுறைகளின் ஆய்விலிருந்து தெளிவாகத் தெரிவது போல், நடைமுறைப்படுத்தக்கூடிய PCIA ஒன்றை உருவாக்குவதற்கான தற்போதைய பல்வேறு முயற்சிகள் ஒன்றன் மீது கவனத்தைக் குவிக்க வேண்டுமென்பதற்காகத் ஏனையவற்றை ஒதுக்கும் நிலையில் பணியாற்றுகின்றன. காலத்தின் அழுத்தங்களும், பற்றாக்குறையான மூலவளங்களும், எந்தக் குறிப்பிட்ட வகையான செய்திட்டங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் செயலாற்ற முடியும் அல்லது செயலாற்றமுடியாது என்பதுபற்றிய நுண்ணிய புரிந்துணர்வைப் பயனுறுவகையில் தடைசெய்தவண்ணம், மேலும் பரந்த, பொதுவான உத்திசார் மட்டப் பகுப்பாய்வின் மீது மிகையாகத் தங்கியிருக்கும் ஒரு நிலைக்குக் காலப்போக்கில் இட்டுச் செல்லக்கூடிய ஆபத்து இதில் உள்ளது.

மூன்றாவதாக வருவது, சூழமைவுகள், நிபந்தனைகள் மற்றும் சூழ்நிலைகள் என்பவை பற்றிய புரிந்துணர்வும், ஆக்கபூர்வமான தாக்கங்களின் நிகழ்வுச் சாத்தியக்கூற்றின்மீது இவைகள் ஏற்படுத்தக்கூடிய விளைவு பற்றிய புரிந்துணர்வு என்பவற்றை மேலும் விருத்திசெய்வதாகும். மீண்டும் இது எதைக் குறிக்கின்றதென்றால், சூழமைவுகளின் முக்கியத்துவம் மற்றும் குறித்த ஒரு தொகுதி சூழ்நிலைகளில் ஏற்படும் குறித்த ஒரு தொகுதி அனுபவங்களிலிருந்து மேலும் பொதுமை வாய்ந்தது எதையும் பெற்றுக் கொள்ளமுடியாது என்ற தாற்பரியம் என்பவற்றுக்கப்பால் செல்ல வேண்டியது அவசியமாகும். வெறுமனே சூழமைவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என அறிவதல்ல; எவ்வாறு ஏன் அவை முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நான்காவதாக வருவது, PCIA இன் வெவ்வேறு துறைகள் மற்றும் அவற்றுக்கிடையிலான துடிப்பான இடைத்தாக்கம் ஆகிய இரண்டினதும் உடன்பாடு காணப்பட்ட மற்றும் நன்கு வேறுபடுத்தப்பட்ட அறிக்கையொன்றை விருத்திசெய்யவேண்டிய தேவையாகும். வெவ்வேறு துறைகளுக்கிடையேயான இடை உறவுத் தன்மை குறித்த ஆழமான ஆய்வானது, குறித்த இடையீடுகளின் நேர்நிலையான அல்லது மறை நிலையான தாக்கத்தைக் கணிப்பீடு செய்வதற்கான மிக வலுவான வழிவகையை வழங்குவது மட்டுமல்லாமல் செய்திட்டங்களின் திரட்டிய மற்றும் பரவல் விளைவுகளைச் சிறப்பாக மதிப்பீடு செய்யவும் வழிசமைக்கிறது.



இறுதியாக, இவையனைத்தையும் கையாளுகையில், சமாதான உருவாக்கல் முயற்சிகள் தொடர்பாகவும், குறிப்பாக அவற்றின் அளவிடக்கூடிய தாக்கம் குறித்து நாம் எழுப்பும் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் பயனுறுதிமிக்க மதிப்பீட்டைச் செய்வதற்கு எமக்குள்ள ஆற்றல் என்பவை தொடர்பாகவும் சமநிலை மற்றும் அடக்கம் என்பவற்றின் தேவைகுறித்த குட்ஹாண்ட் என்பவரின் எச்சரிக்கையை அங்கீகரிப்பது முக்கியமாகின்றது (Good hand 2000).

## 7. உசாத்துணையும் மேலதிக வாசிப்பும்


Anderson, M. 1999. *Do No Harm: How Aid Can Support Peace – or War*, Boulder, Co: Lynne Reinner Publishers.

Banks, M. and C.R. Mitchell 1997. *Handbook of Conflict Resolution: The Analytic Problem-Solving Approach*, London: Pinter.

Borton, J. et. al 1996. *The International Response to Conflict and Genocide: Lessons from the Rwanda Experience*, 5 vols, Copenhagen: Danish Ministry for Foreign Affairs.

Bush, K. 1998. *A Measure of Peace: Peace and Conflict Impact Assessment of Development Projects in Conflict Zones*, Ottawa: International Development Research Centre, (IDRC) Peacebuilding and Reconstruction Programme Initiative and The Evaluation Unit (Working Paper No.1).

Carnegie Commission on Preventing Deadly Conflict 1997. *Preventing Deadly Conflict*, New York, NY: Carnegie.

Cockell, J. 1998. "Peacebuilding and Human Security: Frameworks for International Responses to Internal Conflict," *in* P. Wallensteen, op. cit.

Danish International Development Assistance (DANIDA), *Evaluation Reports* (various), at www.evaluation.dk.

Danish International Development Assistance (DANIDA) 1996. *Logical Framework Approach: A Flexible Tool for Participatory Development*, Copenhagen: DANIDA.

Department for International Development (DFID) / Overseas Development Agency (ODA) 1997. *Office Instructions – Project Cycle Management*.

Ebata, M. 1999. *The Transition from War to Peace: Politics, Political Space and the Peace Process Industry in Mozambique, 1992-1995*, (unpublished PhD work, University of London).

European Commission 1993. *Project Cycle Management: Integrated Approach and Logical Framework*, Brussels: European Commission.

Goodhand, J. 2000. *Conflict Assessment Project: Approach and Methodology*, INTRAC for DFID.

Hoffman, M. 1995. "Defining and Evaluating Success: Facilitative Problem-Solving Workshops in an Interconnected Context," in *Paradigms: The Kent Journal of International Relations*, Vol. 9, No. 2.

INTRAC 1999. *Project Proposal for a Conflict Assessment Pilot Project,* Manchester: University of Manchester.



Lautze, S., B.D. Jones and M. Duffield 1998. *Strategic Humanitarian Coordination in the Great Lakes Region,1996-97*, New York, NY: Office for the Coordination of Humanitarian Affairs (OCHA).

Leonhardt, M. 1999. *Conflict Impact Assessment of EU Development Cooperation with ACP Countries: A Review of Literature and Practices*, London: International Alert.Development Assistance Committee of Organisation for Economic Cooperation and Development (OECD)/ DAC 1999. *Guidance for Evaluating Humanitarian Assistance in Complex Emergencies*, Paris: OECD Publications.

PIOOM 1999. *Armed Conflicts*, Leiden: PIOOM.

Ross, M.H. 2001. "Action Evaluation in the Theory and Practice of Conflict Resolution," *in Peace and Conflict*, Vol.8, No.1, also available at www.gmu.edu/academic/pcs and at www.aepro.org/inprint.

Ross, M.H. and J. Rothman (eds.) 1999. *Theory and Practice in Ethnic Conflict Management: Theorizing Success and Failure*, London: Macmillan.

Rothman, J. 1998. "Action-Evaluation and Conflict Resolution in Theory and Practice," *Mediation Journal*, Vol.15, No.1, 119-131, also available at www.ariagroup.com.

Smilie, I. 1998. *Relief and Development: The Struggle for Synergy*, Occasional Paper No 33, Providence, RI: Watson Institute.

Wallensteen, P. (ed.) 1998. *Preventing Violent Conflicts: Past Record and Future Challenges*, Uppsala: Dept of Peace and Conflict Research, Uppsala University Report No. 48.

Warner, R. 1999. *Strategic Conflict Analysis and Conflict Impact Assessment: A DFID/ CHAD Discussion Paper*, London: DFID.

Woodward, S. 2000. *Strategic Conflict Analysis for Moldova,* INTRAC for DFID.